விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்— 10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ்,
றிக்கோ பீடா வகைகளுக்கும்
றிக்கோ ஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*

எண்ணெய் முழுக்குக்கு சிறந்தது.
ஒலிவ் ஸ்நானப்பவுடர்
வாங்கி உபயோகியுங்கள்.
தலைமயிரிலுள்ள அழுக்கு, பிசான, சொடுகு, பேன், ஆகியவற்றை நீக்கி, கண்ணுக்குக் குளிர்ச்சியையும், தலைமயிருக்கு வளர்ச்சியையும் கொடுக்கின்றது.
—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

மலர் 19 ஆடி 30 ஷஃபா: 28 ஞாயிற்றுக்கிழமை [14—8—77] இதழ் 184

# மாவு, பாண் புதிய விலை

# உடனடியாக அமுல்!

## உணவு, கூட்டுறவு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**மாவு, பாண் ஆகிய இரு பொருள்களினதும் குறைக்கப்பட்ட விலைகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளன.**

**இந்த விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக உணவு, கூட்டுறவு அமைச்சு அறிவித்துள்ளது.**

வெளியூர்களில் இந்தப் புதிய விலைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்படாவிட்டாலும், ஏற்கனவே விற்கப்பட்டுவரும் விலைகளிலிருந்து மாவின் விலையில் 20 சதமும், பாணின் விலையில் 15 சதமும் கடைக்காரர்கள் குறைத்துவிற்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவு, பாண் விலைகள் உடனடியாகக் குறைக்கப்படுவதால் சாப்பாட்டுக்கடைகளிலும் இதர சிற்றுண்டிச்சாலைகளிலும் விற்கப்படும் இடியப்பம், தோசை மற்றும் உணவுப்பொருட்களின் விலைகள் கணிசமான அளவு உடனடியாக குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்கீட்டுச்கு அரிசி சீனியின் அளவு அதிகரிக்கப்பட்டிருப்பதால் கடைகளில் விற்கப்படும் சாப்பாட்டின் விலையும் இதர இனிப்புப்பண்டங்களின் விலைகளும் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முக்கியமான உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதால் ஏனைய பொருட்களின் விலைகளும் சுயமாகவே ஓரளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்களுக்கு உணவுப்பொருட்கள் தாராளமாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கச்செய்வதற்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் முதல் கட்டமே இந்த விலைகுறைப்பாகும். இன்னும் சிலதினங்களில் வேறு பல நடவடிக்கைகளும் இதுதொடர்பாக எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விளைவுகளை கணிப்பீடுசெய்தபின் மேற்கொண்டும் மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

## கூவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இன்று இழுக்கப்பட்ட 626-வது இலக்க தேசிய கூவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
43 A 0211
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
24 W 0071
ரூபா 60,000

மூன்றாவது பரிசு
02 X 0819
ரூபா 10,000

(10-ம் பக்கம் பார்க்க)

## திருட்டு வலை மீட்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருடப்பட்டவை எனக் கருதப்படும் 25 மீன்பிடி வலைகளைக் கைப்பற்றியுள்ள காங்கேசன்துறைப் பொலிசார் இது தொடர்பாக இரு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

## விமானத்தை கடத்தியவர் பிடிபட்டார்

ஏதன்ஸ், ஆகஸ்ட் 13

பாரிஸிலிருந்து கெய்ரோவுக்குப் போய்க்கொண்டிருந்த விமானத்தை திசை திருப்பிய நபர் இத்தாலியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாரிஸிலிருந்து கெய்ரோவுக்கு 230 பிரயாணிகளுடன் இந்த விமானம் பறந்துகொண்டிருந்தது. ஆயுதம் தரித்த நபர் ஒருவர் இவ் விமானத்தை லிபியாவுக்குத் திருப்பி ஓட்டும்படி பயமுறுத்தினர். ஆனல் லிபியாவில் பெங்ஸஸி விமான நிலையத்தில் விமானம் இறங்குவதற்கு அதிகாரிகள் அனுமதியளிக்க மறுத்துவிட்டார்கள். அதனல் விமானம் இத்தாலிக்கு கொண்டுவரப்பட்டு எரிபொருள் ஏற்றுவதற்காக பிரின்ஸி என்ற இடத்தில் தரைஇறக்கப்பட்டது.

இங்கு வைத்து விமான ஊழியர்கள் திசைதிருப்பிய பயங்கரவாதியை கீழே பிடித்து தள்ளிவிட்டார்கள். அந்தசமயத்தில் பார்த்து இத்தாலிய பாதுகாப்பு அதிகாரிகள் ஆசாமியை சூழ்ந்து பிடித்துக்கொண்டார்கள். பிரயாணிகளும் விமான ஊழியர்களும் ஆபத்தின்றி தப்பினர்கள்.

யாழ். நகரில்

## வடிகால்களை உடனுக்குடன் சுத்தம் செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியகடை பகுதியை சுற்றியுள்ள வடிகால்களில் படிந்துள்ள அழுக்கை உடனுக்குடன் சுத்தம்செய்வதற்கும், மின்சார விளக்குகள் தடையின்றி எரிவதற்கும் யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. சிவஞானம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பஜாரை சுற்றியுள்ள வடிகால்கள் இன்று ஒரு லொறி நல்ல தண்ணீர் மூலம் சுத்தம் செய்யப்படும்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுள்ளது.

யாழ். நவீன சந்தையினுள் மல சலகூடமும், தினமும் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசேட ஆணையாளர் நேற்று முன்தினம் இரவு வீதிகளில் திடீர் சோதனைசெய்தபோது 30 மின் விளக்குகள் எரியாமல் இருப்பதை கண்டுபிடித்தார்.

நேற்று விசேட மின்கார ஊழியர் குழு, மின் விளக்குகளை எரியசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

[10ம் பக்கம்பார்க்க]

விம்ஸ்
எக்கௌவுன்ரெக் போதன நிலையம்
14, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- I. C. M. A. நவம்பர் 77, மே 78.
- I. A. A, A. I. B.
- FIRST IN LAWS.
- க. பொ. த. (சாதாரணம்).
- க. பொ. ச. (உயர் தரம்).
- தே. க. பொ. த.
- உ. தே. க. பொ. த.
- SPOKEN ENGLISH.

6851

## நவீன சந்தை வேலைகள் நவம்பரில் பூர்த்தியாகும்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுமார் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் யாழ். நவீன சந்தையின் வேலைகள் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பூர்த்தியாகும்.

இத்தகவலை யாழ். மாநகர சபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

கீழ்ப்பகுதி வேலைகள் பெரும் பகுதி பூர்த்தியாகிவிட்டதாகவும் மேல் பகுதி வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினர்.

கீழ்ப்பகுதி 47 கடைகள் கொண்டதாக இருக்குமென்றும் மேல் பகுதியில் இரு மண்டபங்கள் இடம்பெறும் என்றும் அவர் கூறினர்.

சிமெந்து தட்டுப்பாடின்றிக் கிடைக்குமானல் டிசம்பருக்கு முன் வேலை பூர்த்தியாகும் என்றும் அவர் கூறினர்.

ஆஸ்பத்திரிக்கு

## எம். பி. திடீர் விஜயம்; நோயாளிகள் வாட்டில் இல்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் சீரான கவனிப்பு, மருந்துவகை தட்டுப்பாடு சுகாதாரக்குறைவு என்பன

(10-ம்பக்கம்பார்க்க)

# வ ரி வி ள ம் ப ர ம்

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 33 சிறீ 8000 தொடரிலக்கமுடைய லாம்புறே ஸ்கூட்டர் வான் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பொன்மலர் ஸ்ரோர்ஸ், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 6803

2 ஸ்ரீ தொடர் இலக்கத்தையுடைய வெஸ்பா இனத்தைச் சேர்ந்த நல்லநிலையில் உள்ள ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: S. குலசேகரம், 71, பிரதான வீதி, யாழ்நகர். 6817

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பொம்மைவெளி குடியேற்றத் திட்டத்திற்கு அருகாமையில் ரேட்டுக்கரையில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்: ந. இராசகுலசிங்கம், இல. 6, 2-ம் ஒழுங்கை பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 6846

திருநெல்வேலி சிவன்கோவிலுக்கு தெற்கே மணல்தறை ஒழுங்கையிலுள்ள 64-ம் இலக்க மா. நாகலிங்கத்தின் மா, பிலா, தென்னை, மரங்களைக் கொண்ட பழைய வீட்டுடன் 5 1/2 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு. யாழ். வளாகத்திலிருந்தும், நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கும் 1/2 மைல் தூரத்தில் உள்ளது. விலைவிபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். நா. கந்தசாமி, கதிரிப்பாய், அச்சுவேலி. 6840

ஜேமன் ரெக்னிக்கல் வரைதல் இன்ஸ்ருமன்ஸ், ஸ்ரெட்வர் பேனைகள், கிறபோஸ்மாலை பேனைகள், ரேப்கள் முதலியன. 257, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6850

## தேவை

கா. பொ. த. (சாதாரணம்) ஆங்கிலம் உட்பட சித்தியடைந்த பெண், கொழும்பில் பணிபுரிய உடன் தேவை. விண்ணப்ப முடிவு திகதி 19-8-77. "சத்தியா றவல்ஸ்", 224 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6842

ஆபீஸ் பையன் தேவை. வயது 15 முதல் 22 வரை. தராதரம்: J. S. C. இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், விம்ஸ், 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 6853

## இலவசம்

"வேல்லையே வெல்லும் வேல்" சீனாய் மலையின் கொடுமுடியில்! இருபதாம் நூற்றுண்டின் வெற்றி மத்திய கிழக்கில் நிர்ணயிக்கப்படுகின்றதா? இலவச விபரங்களுக்கு! த. இ. இனபநாதன் சரசாலை சாவகச்சேரி. 6811

## CLASSES

I. C. M. A., Novamber 1977 Exam Rapid Course. Commences on 20-8-77 at 1 P. M. — Education Centre, No. 22, Ramiah Chettar Lane, Hospital Road, Jaffna. 6856

## ஏலவிற்பனை

எமது சங்கத்தில் 150 நூல் பேல் சாக்குகள் 20-8-77 சனிக்கிழமை காலை 10மணிக்கு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து ஏலவிற்பனை செய்யப்படும். ஏலத்தில் பொருளை கொள்வனவுசெய்வோர் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல்வேண்டும்.

பொது முகாமையாளர்.
யாழ். மாவட்ட-புட-நெசவாளர்- கூட்-சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 6844

---

உ
முருகன் துணை

தெல்லியூர் வித்துவசிரோமணி
பூ. பொன்னம்பலப்பிள்ளையின்

# மாவை யமக அந்தாதி

(பேராசிரியர் வித்துவான்
ஔவை சு. துரைசுவாமிப்பிள்ளையின் உரையுடன்)

# வெளியீட்டு விழா

காலம்: 16-8-77 செவ்வாய்க்கிழமை
மாலை 6-30 மணி.

இடம்: மாவை முருகன் சந்நிதானம்

தலைமை உரை:
பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் M. A. Ph. D (இந்து கலாச்சார பீடம், யாழ் வளாகம்)

ஆசியுரை:
'சிவாகம வித்தியாபூஷணம்'
பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா

நூல் வெளியீட்டுரை:
உயர்திரு 'நாவலர்' அ. அமிர்தலிங்கம் B.A.
எதிர்க்கட்சித் தலைவர், தேசிய அரசுப் பேரவை

முதற் பிரதி பெறுநர்:
'சிவதரும வள்ளல்' திரு. வ. கனகராசா ஜே.பி

ஆய்வுரைகள்:
கலாநிதி திரு. அ. சண்முகதாஸ் M. A ,Ph.D.
(தமிழ்த்துறை-யாழ் வளாகம்)

பண்டிதர் இ நமசிவாயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூல் வெளியீட்டுக்குழு
எல்பிஹெம் நிறுவனம்

மாவை ஆதீனம்
4-8-77 679?

---

யாழ்ப்பாணக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

# விசேட பொதுக்கூட்டம்

அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியை மீண்டும் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்க அரசாங்கத்திடம் கோருவது சம்பந்தமாக ஆராய 20-8-77-ல் கூடவிருந்த விசேட பொதுக்கூட்டம் 24-8-77 ஷெ கல்லூரியில் மாலை 4-30 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றனர். அறிவித்தல் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

க. குணரத்தினம்
கௌரவ்செயலாளர். 6849

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகும்.

உற்சவம் 15 தினங்கள் நடைபெற்று இம்மாதம் 27 ந் திகதி தேர்த்திருவிழாவும் 28-ம் திகதி தீர்த்தமும் நடைபெறும். (கெ)

## இலவசம்

இலங்கையிலுள்ள இந்து இளைஞர் மன்றங்களுக்கும், இந்து மகாசபைகளுக்கும் பூசைக்குரிய பெரிய நால்வர் படங்களை இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் "மில்க்வைற்" ஸ்தாபனத்தார் முன்வந்துள்ளதர்கள். பெறவிரும்பும் மன்றங்களும், சபைகளும் நேரில் சென்று அல்லது தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்-கிளிநொச்சி

# வெற்றிடங்கள்

எமது சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு கீழ்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் "தலைவர், கரைச்சி தெற்கு ப., நோ. கூ. சங்கம், கிளிநொச்சி" என்ற விலாசத்திற்கு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கோரும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 31-8-77-ம் திகதி பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்

| பதவிகள் | தகமைகள் | சம்பள அளவுத் திட்டம் | வயது |
|---|---|---|---|
| 1. காசாளர் தரம்-II | எண்கணிதத்தில் அல்லது கணக்கியலில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் குறைந்த பட்சம் ஒரு திறமைச் சித்தியையேனும் உடைய ஆறு பாடங்களில் பெற்றுள்ள க.பொ.த.ப.(சாதாரணதர)ச் சித்தியும் ஒருவருடகால அனுபவமும். | 200—380 / 8×10, 12.50×8 | 20—35 |
| 2. கணக்கு லிகிதர் தரம்-II | 1. கணக்கியல் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதரணதர)ச் சித்தி அல்லது<br>2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண தர) தராதரப்பத்திரம் கணக்கியலில் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் திறமைச்சித்தியுடன் கூடிய க. பொ.த.ப. (சாதாரணதர) இனையுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமைஅளிக்கப்படும். | 180—304 / 6×10, 8×8 | 20—35 |
| 3. பொது லிகிதர் தரம்-II | 1. ஆறு பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரணதர)மும் இரண்டு வருடகால அனுபவமும். அல்லது<br>2. க. பொ. த. ப (சாதாரணதரம்) ஆறு பாடங்கள், இவற்றுள் இரண்டு பாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம் அல்லது பொருளாதாரவியலாக இருத்தல்வேண்டும், அல்லது<br>3 பொது எழுதுநர் பதவியின் தரம்-III இல் இரண்டு வருடகால அனுபவம். | 200—340 / 8×10, 10×6 | 18—30 |
| 4. பொது லிகிதர் தரம்-III | எண்கணிதத்தில் திறமைச் சித்தியும் 6 பாடங்களில் சித்தியும் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தரம்) | 160—265 / 5×12, 7.50×6 | 18—30 |
| 5. சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் தரம்-I | 1. கூட்டுறவு வேலையாளர் (சாதாரண தர) தராதரப் பத்திரமும், வர்த்தகம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த.ப. (சாதாரண தர)ச் சித்தியும் 3 வருடகால அனுபவம் அல்லது<br>2. தரம்-II பதவியொன்றில் பெற்றுள்ள ஐந்து வருடகால அனுபவம். | 300—435 / 10×6, 12.50×6 | 23—40 |
| 6. சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் தரம்-II | 1. ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த.ப.(சாதாரணதர) தராதரப் பத்திரமும், இரண்டு வருடகால அனுபவமும், கூட்டுறவு வேலையாளர் (சாதாரண) தராதரப் பத்திரமும். | 200—340 / 8×10, 10×6 | 23—40 |

மேற்படி சங்கத்தில் பணிபுரிபவர்களும், சங்கத்தில் மேலதிக பணியாளர்கள் என்ற அடிப்படையில் 1-8-77 தொடக்கம் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களும் விண்ணப்பம் செய்யுமிடத்து வயது எல்லைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்) வே. நடராசா
தலைவர்

கிளிநொச்சி,
11-8-1977. 6841

# விதியின் வழியில்!



நான் ஜன்னல் ஓரத்தில் இருந்து கீழே பார்க்கிறேன், விமான நிலையத்தின் மேல்மாடியில் நின்று எனக்குக் கை அசைத்த அப்பா, அம்மா, சாந்தா, கோமளா, நண்பர்கள்-எல்லோரும் சிறியவர்களாகி மறைகின்றனர். ஆனால், விமான நிலையத்திற்கு வராமலே, பிரியாவிடை தந்த 'யோகா' மட்டும் என் மனக்கண் முன்பு, பெரிய உருவத்துடன் தோன்றுகிறாள். நீண்ட ஒரு பெருமூச்சுடன் என் எண்ணத்தைத் திசைதிருப்ப முயல்கிறேன்.

பஞ்சு பரப்பியது போன்ற வெண் முகில் கூட்டங்களுக்கு மேலாக கோலாலம்பூரை நோக்கிப் பறந்துகொண்டிருக்கிறது. 'சுவிஸ் எயஸ்' கம்பனிக்குச் சொந்தமான அந்த 'ஜெட்' விமானம், அது ஒலியைவிட வேகமாகச் செல்லும் ஆற்றல் உள்ளது.

'ஐயாயிரம் அடி உயரத்தில் எண்ணூற்று ஐம்பது மைல் வேகத்தில் நாங்கள் பறந்துகொண்டிருக்கிறோம். 'உங்கள் பெல்டுகளை' இறுக்கிக் கட்டிக்கொள்ளுங்கள்' என்ற விமானியின் அறிவிப்பு எனக்குச் சிறிது பயத்தைக்கொடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாஸ்கோவியாவிஸ் மலையொன்றின் உச்சியில் மோதி நொருங்கிய 'இந்தோனேஷிய' விமான விபத்தின் ஞாபகம் என் இருதயத்துடிப்பை அதிகமாக்குவதை உணர்கிறேன். அது ஒரு பயங்கரமான நிகழ்ச்சி.

ஜன்னலின் ஊடாக எதையும் பார்க்க முடியவில்லை. மாலைக் கதிரவனின் ஒளி, விமான இறக்கையில் பட்டுத் தெறித்துக் கண்களைக் கூசச் செய்கிறது.

காலியாக இடது பக்க ஆசனத்தின் பக்கத்தில் ஏதோ ஒலி கேட்டுத்திரும்புகிறேன். வகை வகையான 'சொக்லேட்'களும் பிஸ்கட்டுகளும், அழகாக அடுக்கப்பட்ட பிளாஸ்டிக் தட்டுடன் நின்ற விமானப் பணிப்பெண் என்னை நோக்கியவண்ணம் தட்டை நீட்டுகிறாள். அதே முகம், அதே அகன்ற வட்டமான கண்கள். அதே புன்சிரிப்புத் தவழும் 'லிப்ஸ்டிக்' பூசிய இதழ்கள். சூழ்நிலையை ஒரு கணம் மறந்து, அவளையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த என்னை 'டேக் இட்' என்ற பணிப்பெண்ணின் குரல் தட்டி எழுப்புகிறது.

மயங்கிய நிலையில் தயக்கத்துடன் இருந்த நான் 'யோகா' என்று உரக்கக் கூவி விடுகிறேன். என் நிலை அவளுக்குப் புரிந்திருக்கவேண்டும். 'ஐ ஆம் நொட் யோகா', ஐ ஆம் ரேகா' என்று ஆங்கிலத்தில் புன்சிரிப்புடன் கூறிய அவளையே பார்த்தவண்ணம் 'சொக்லேட்'டை எடுக்கிறேன். யோகாவும் ரேகாவும் இரட்டைக் குழந்தைகளோ...?

பளபளக்கும் 'சொக்லேட்' உறையை மெதுவாகப் பிரிக்கும் பொழுது 'சலசலத்த' அந்தக் கண்ணடிக் கடதாசியை, முன் 'சீட்'டின் பின்புறம் இருந்த பையில் போட்டுவிட்டு, சொக்லேட்டை வாயில் இட்டு மெல்லக் கடிக்கிறேன். சொக்லேட் பேப்பரின் சலசலப்பு என் மனதிலும் ஒரு சலசப்பை உண்டாக்கிவிட்டது. சொக்லேட்டைச் சுவைத்தபடி, சுவையற்றதாகிவிட்ட என் கடந்தகால எண்ணச் சுழலில் சிக்கித்தவிக்கிறேன்...

—யோகா...!

அவள் பெயர் யோகேஸ்வரி. பள்ளிக்கூடத்திலும், வீட்டிலும் ஊரிலும் அவளை ஈஸ்வரி என்றுதான் எல்லோரும் அழைத்தார்கள். ஆனால் நான் மட்டும் 'யோகா' என்று சிறிது நாகரிகமாகவே கூப்பிடுவேன். எதிலும் புதுமை திகழவேண்டுமென்ற எண்ணம் கொண்ட நான் ஈஸ்வரியை விட்டுவிட்டு 'யோகா' என்று அழைப்பதில் திருப்தியடைந்தேன். அப்படி அழைப்பதை அவளும் பெரிதும் விரும்பியிருக்கவேண்டும். நான் அழைக்கும் போது அவளுக்கு ஏற்படும் திருப்தியின் நிறையை அவளின் அகன்ற காதளவோடிய கண்களில் கண்டேன்.

ஆரம்ப வகுப்பில் இருவரும் 'ஆனா ஆவன்னா' படித்தோம். வகுப்பும் ஏற ஏற வயதும் ஏறியது. அவளின் வீட்டுக்கணக்குகளை நான்தான் சரி பார்த்துக்கொடுப்பேன். ஆங்கிலக் கொப்பியை நான் திருத்திக்கொடுப்பேன். இருவரும் ஒன்றாகவே விளையாடுவோம். இந்தவிதமான நெருக்கமான நட்புக்குக் காரணமாக இருந்தது. அவள் வீடு எங்கள் வீட்டுக்கு மிக அண்மையில் இருந்தது என்பதைவிட, நாங்கள் உறவினர்கள் என்பது மிகவும் பொருத்தமானதாகும்.

தந்தையைப் பிறக்குமுன்பே விழுங்கிவிட்ட போகாவின் குடும்பம் மிகச் சிறியது. அவளுடைய அக்கா தெய்வானை மணமாகி கணவனுடன் கண்டிப்பக்கத்தில் 'எஸ்டேட்' ஒன்றில் இருந்தாள். இளையவளான யோகாவும், தாயார் செல்லம்மாவும்தான் வீட்டிலிருந்தார்கள். ஓரளவு பணவசதியும் நிலபுலன்களும் இருந்தபடியால் வறுமை என்னும் பிணி அவர்களைப் பிடிக்காமல் காலம் தள்ளிவந்தார்கள்.

அசலன்

மாரிகாலத்தையும் கோடைகாலத்தையும் விழுங்கிய காலதேவன், ஆண்டுகளை உருட்டிவிட்டான். எத்தனையோ மாற்றங்கள் மலர்ந்துவிட்டன. அவைகளில் ஒன்று யோகாவை மலரச்செய்தது. அவள் அன்று பாடசாலைக்கு வரவில்லை. அன்று மத்தியானம் நான் சாப்பிட வந்த பொழுது 'ராசா, ஈஸ்வரி பெரிய பிள்ளையாகிவிட்டாள். நானும் அவரும் போய் உடனே தண்ணீர் வார்த்துவிட்டோம். செல்லம்மா பாவம் தனிக்கட்டை என்ன செய்வாள் பாவம்' என்றபடி யோகாவின் வீட்டில் இருந்துகொண்டு வந்த பார்சலை என் முன்பு வைத்தா எனது அம்மா.

பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. அன்று சனிக்கிழமை. யோகாவின் தாயார் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தா. நான் ஏதோ ஒரு கதைப் புத்தகத்தில் மூழ்கியிருக்கிறேன். அப்பா வெளியில் சென்றிருந்தார். வீட்டிலிருந்தா அம்மா.

''வா செல்லம். எப்பிடி சுகம் தானே. ஈசுவரி என்னசெய்கிறாள்.''

''என்னவோ கடவுள் புண்ணியத்திலை சுகமாக இருக்கிறாள். அண்ணை எங்கே...? காணவில்லை. அவருடன் ஒரு விசயம் கதைக்கவேணும்.''

''கோயிலடிக்குப் போயிருக்கிறார். வாற நேரமாகிறது. நீ ராசாவுடன் கதைத்துக்கொண்டிரு நான்தேத்தண்ணி போட்டுக்கொண்டுவாறன்'' -என்றபடி அம்மா குசினிக்குள் சென்றுவிட்டா.

'செல்லம்மா அப்பாவைக் கேட்கும் விஷயம் என்னவிஷயமாக இருக்கும்' என்று என் மனம் ஆராய்ச்சியில் இறங்கியது. அதற்குள் அம்மா குசினிக்குள் இருந்து தேத்தண்ணி கொண்டு வரவும், அப்பா 'கேட்'டைத் திறந்து வளவுக்குள் வரவும் சரியாக இருந்தது.

சிறிது நேரம் பல விஷயங்களையும் பேசிமுடித்த அப்பாவை செல்லம்மா 'உங்களை ஒண்டுகேக்கவேணும் எண்டுதான் வந்தனான். என்ரை ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் இருக்கு'' என்றா.

''என்ன செல்லம் விஷயத்தைச் சொல்லு'' -அப்பா.

''இல்லை. இவள் ஈஸ்வரி தொடர்ந்து படிக்கவேணும் எண்டு நிற்கிறாள். எனக்கு விருப்பம் இல்லை. நீங்கள் சொன்னால் சரி.''

''யோசிக்க என்ன இருக்கிறது. ஏன் யோகேஸ்வரி தொடர்ந்துபடிக்கட்டும். ராசாவும் 'யூனிவேசிற்றி' சோதினை எடுத்திருக்கிறான். ஈஸ்வரியும் எடுத்திருக்கிறாள். சோதினையிலை எடுபட்டால் இரண்டு பேரும் படிக்கட்டும். நீ, ஒன்றுக்கும் கவலைப்படாதை, செலவைப்பற்றியும் யோசிக்காதை. எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று முடித்தார் அப்பா.

செல்லம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. யோகாவைத் தொடர்ந்து படிக்கச்சொல்லி செலவையும் அப்பா ஏற்றுக்கொண்டாரல்லவா?

எனக்கு மிகவும் சந்தோஷம். இந்தமுறை நானும் யோகாவும் 'யூனிவேசிற்றி' சோதனை பாஸ்பண்ணி ஒன்றாக எடுபட்டால், பேராதனைப் பல்கலைக் கழக நாட்களை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம்' என்று.

எனது அம்மா ஒரு குறும்புச் சிரிப்புடன் என்னையும், அப்பாவையும் செல்லம்மாவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு''என்னவோ செல்லம்மா உனக்கும் ஒண்டு, எங்களுக்கும் ஒண்டு, அதுகள் சந்தோஷமாக இருந்தால் போதும்'' என்று சொன்னதின் உட்பொருள் விளங்கிய நான் மெல்லச் சிரித்துக்கொண்டேன்.

சிறிது நேரம் நிலத்தையும் ஆகாயத்தையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்த செல்லம்மா, நீண்டதொரு பெருமூச்சைவிட்டுவிட்டு 'அப்ப நான் போட்டுவாறன்' என்றபடி எழுந்து சென்றுகொண்டிருந்தா. ஏதோ தீவிரயோசனையில் ஆழ்ந்திருந்த அப்பா தலையை மட்டும் ஆட்டி விடைகொடுத்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து அழைப்பு வந்ததும், நானும்யோகாவும் நான்கு ஆண்டுகள் அங்கு கழித்ததும் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள். இருவரும் இறுதி ஆண்டுப் பரீட்சை எழுதிவிட்டு ஊருக்கு வந்திருந்தோம்.

அன்று வெள்ளிக்கிழமை- மாலை நேரம், அப்பா வீட்டில் இல்லை. நான் அன்றைய 'ஈழநாடு' பத்திரிகையைப்புரட்டிக் கொண்டிருக்கிறேன். விறாந்தையில் பேசிக்கொண்டிருந்த இரு குரல்கள் என் கவனத்தைத் திசை திருப்பின.

''ராசாவுக்கு வெளிநாட்டில் படிப்பதற்கு 'ஸ்கொலர்ஷிப்' ஒன்று கிடைத்திருக்கிறது. இந்த மாச முடிவில் எப்படியாவது புறப்படவேண்டும். அதற்கு முன் 'றிசிஸ்ரேச'னை முடித்துவிட்டுத்தான் ராசாவை அனுப்பவேண்டும். பிறநாடுகளில் இல்லாததும் பொல்லாததும் நடக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். உனக்கும் சம்மதம்தானே'' என்ற அம்மாவின் வினவுக்கு விடை ஒன்றும் வராதபடியால் பனச் சஞ்சலத்துடன் எட்டிப்பார்த்தேன். மிகவும் வேகமாகச் செல்லம்மா 'கேட்'டைத் திறந்து செல்வது தெரிந்தது. ஏன் செல்லம்மாவுக்கு இந்தக் கலியாணத்தில் விருப்பமில்லையோ...?

என் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. எனக்கு 'ஸ்கொலர்ஷிப்' அழைப்பு வந்தது யோகாவுக்குத் தெரியாது. அவளைப் பிரிந்து மூன்று ஆண்டுகளை எப்படிக் கனடாவில் கழிக்கப்போகிறேனோ என்ற ஏக்கம்... போகாமல் விட்டுவிட்டால் ... சே... என்ன மடமை.' இப்படியான சந்தர்ப்பத்தை இழக்கலாமா...?

அன்றிரவு வெகு நேரம் எனக்கு நித்திரை வரவில்லை. படுக்கையில் புரண்டுபுரண்டு படுத்துக்கொண்டிருந்தேன். தெருவில் இரண்டொரு நாய்கள் 'ஊளை'யிட்டு இரவின் அமைதியைக் கெடுத்துக்கொண்டிருந்தன. இரண்டாவது படக்காட்சிக்குச் சென்று திரும்பிக்கொண்டிருக்கும் ஒருவன், அதில்வரும் பாட்டொன்றைத்தனக்குத் தெரிந்த இராகத்தில் உளறிக்கொண்டு சென்றான்.

என்னைப்போல அப்பாவும் அம்மாவும் நித்திரை இல்லாமல் இருந்திருப்பார்களோ...? ''வெளிநாட்டுக்கு அனுப்புமுன் ராசாவுக்கும் ஈஸ்வரிக்கும் 'றிசிஸ்ரேச'னை முடித்துப் போட்டு அனுப்புங்கோ'' என்ற அம்மாவை ''அதெல்லாம் எனக்குத்தெரியும், நீ பேசாமை இரு. நான் ராசாவோடை யோசித்து முடிவுசெய்வென்'' என்ற அப்பாவின் கோபமும் கடுமையும் கலந்த குரல் அம்மாவை மேலே பேசவிடாமல் செய்துவிட்டது.

அப்பா என்னுடன் யோசித்துத்தான் முடிவுசெய்யப் போகிறார். ''கரும்பு தின்னக் கூலியா கொடுக்கவேண்டும்'' எனக்கு நல்ல விருப்பம் என்று சொல்லிவிடவேண்டியதுதான். 'காதல்பாதை கரடுமுரடானது' என்று ஒருமடையன் எழுதிவைத்துவிட்டான் என்ற திருப்தியுடன் தூங்கிவிட்டேன்.

விடிந்து வெகுநேரமாகியிருக்கவேண்டும். பாதி மூடியும் மூடாமலும் இருந்த ஜன்னலின் ஊடாக வந்த சூரியஒளி என் முகத்தில் சுரீர் என்று குத்தியது. முதல் நாள் இரவு அப்பாவுக்கும் அம்மாவுக்குமிடையே நடந்த உரையாடல் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ''என்னுடன் யோசிக்க என்ன இருக்கிறது. எல்லாம் உங்க விருப்பப்படியே செய்யுங்கள் அப்பா'' என்று சொல்லிவிட வேண்டியதுதான் என்று சிந்தித்தபடி இடதுபுறம் திரும்பிப்படுக்கிறேன்.

அறையின் கதவு மெல்லத் திறக்கப்பட்டு யாரோ வரும் சந்தடி கேட்கிறது. நான் லேசாகத் திரும்பிப் பார்க்கவும ''ராசா எழுந்து வா உன்னுடன் கதைக்கவேண்டும்'' என்ற அப்பாவின் குரலில் இருந்த கரகரப்பும், அவருடைய முகத்தில் தெரிந்த பரபரப்பும், எனக்குச் சிறிது பயத்தைக் கொடுத்தது.

''ஈஸ்வரியும் நீயும் சூழ்நிலையின் காரணமாக மிகவும் நெருக்கமாக வாழ்ந்து, வளர்ந்துவிட்டீர்கள். உனக்கும் ஈஸ்வரிக்கும் கலியாணம் என்பது நடவாத விஷயம். உனக்கு இன்று நான் சொல்லப்போகும் இரகசியம், என்னை ஒரு கீழானவனாக மதிப்பிட வைக்கும்...... இருந்தாலும் சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்று தொடர்ந்து என் காதுக்குள் அவர் சொன்ன இரண்டொரு வரிகள், என்னை ஒரு மலை உச்சியில் இருந்து கீழே தள்ளிவிடுவதுபோன்ற உணர்ச்சியுடன் அந்த இடத்திலேயே இருந்துவிட்டேன்.

'யோகா எவ்வளவு புனிதமானவள். என்னை எவ்வளவு நேசிக்கிறாள். என்னை ஒரு நாளைக்குக் காணாவிட்டாலும்,

(9-ம் பக்கம்பார்க்க)




## சோவியத் பாடகி



இரினா ஆர்க்கிப்போவா - சோவியத் நாட்டின் பெருமைக்குரிய பாடகர்களில் ஒருவர். மாஸ்கோவிலுள்ள பொல்ஷோய் தியேட்டரில் ஒரு நிகழ்ச்சியில் இவ்வாறு தோன்றுகிறார்.

## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -3

# இலங்கைச் சமூக சீர்திருத்தச்சபை தாபித்தல்

ச. அம்பிகைபாகன்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆனந்தகுமாரசுவாமி இலங்கைக்கு வந்தபொழுது, இலங்கை மக்கள் சிறப்பாகக் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் நெடுங்காலம் அந்நியர் ஆட்சியின் கீழிருந்தபடியால், மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கியிருந்தனர். அனகாரிக தர்மபாலரும், ஜேணல் ஓல்கொற்றும் இலங்கை மக்களுக்குத் தங்கள் பண்டைப் பெருமையை விளக்கி அவர்களை விழித்தெழச்செய்ய அரும்பாடுபட்டனர். 1904ம் ஆண்டில் இலங்கைப் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்கள் மூலம் இவர்களின் இயக்கங்களுக்குத் தமது ஆதரவை ஆனந்தகுமாரசாமி கொடுத்தனர்.

மேலும் இக்காலத்தில் கலை சம்பந்தமான விஷயங்களிலும் மொழி சமூகம் சம்பந்தமான விஷயங்களிலும் நேரடியாக ஈடுபடத் தொடங்கினர். ஜிந்துப்பிட்டியில் நடைபெற்று வந்த அரிச்சந்திர நாடகத்தை அழைப்பின்பேரில் பார்வையிட்டனர். தகப்பனார் இந் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விக்ரோறியா ராணிக்கு முன் நடித்துக் காட்டியபடியால் இதில் இவருக்கு அதிகம் நாட்டமிருந்திருக்கும். நாடகத்தைப் பார்த்த பின்னர் 1904ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ந் திகதி கண்டியிலிருந்து ஒப்சேவர் பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதினார். அதில் நாடகத்தை ஐரோப்பிய மயப்படுத்தியிருப்பதை, உதாரணமாக நடிகர்களுக்குச் சிவப்புக் கால்மேஸ் போடுதல், இந்திரனுக்குச் சேட்டும் ரையும் அணிதல், விஸ்வாமித்திரரைக் கதிரையில் இருக்கச்செய்தல் போன்றவற்றைக் கண்டித்துள்ளார். பக்கவாத்தியமாக ஹாமோனியத்தை உபயோகித்திருப்பதையும் கண்டித்துள்ளார். இது இந்திய சங்கீதத்துக்கு சிறப்பாகக் கர்நாடக சங்கீதத்துக்கு பொருந்தாத வாத்தியமென்பது அவர் கருத்து.

சிங்கள மக்கள் மேல்நாட்டு ஆதிக்கத்துக்கு உடந்தையாயிருப்பதை 1905ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அந்தக் காலத்தில் அரசாங்கமும், மிஷனரிமாரும் நடாத்திய கல்லூரிகளில் சிங்களம் போதிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு ஏன் சிங்கள மக்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பவேண்டுமென்று கேட்கிறார். சிங்கள மக்கள் சம்மதமில்லாமலே எப்படித் தலதாமாளிகாவுக்கருகில் ஒரு கிறிஸ்தவத் தேவாலயத்தைக் கட்டமுடியுமென்றும் கேட்கிறார். ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடக்கும் ஆராதனைக்கு இடைஞ்சலாய் இருக்குமென்பதினால் அந்நேரத்தில் தலதாமாளிகையில் நடக்கும் பூசைக்குத் தடை போட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மக்கள், அந்நியர் உடையணிவதில் அதிக மோகமுடையவராக இருப்பதைக் கண்டித்து 'இரவல் புடைவை' (Borrowed Plumes) என்னும் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். இது போன்ற இவரது எழுத்துக்களினால் ஒருசிலர் பத்தியில் இலங்கைச் சமூகத்தைத் திருத்துவதற்கு ஒரு சபை நிறுவவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. இச்சங்கத்தைத் தாபித்தலில் திருமதி



மொசியன் ஹிரின்ஸ், பீற்றர் ஆபுறு என்பவர்களே ஆனந்த குமாரசுவாமியுடனும் அவரது மனைவி எதெல் குமாரசுவாமியுடனும் தீவிரமாக உழைத்தனர். இந்நால்வருமே முதல் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பினர். இவ்வாலோசனைக் கூட்டத்தின் தீர்மானப்படி 1905ம் ஆண்டு யூலை மாதம் 29ந் திகதி ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலங்கைச் சமூக சீர்திருத்தச் சபை என்னும் ஒரு சபையை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டதோடு ஆனந்தகுமாரசுவாமி அவர்களைத் தலைவராகத்தெரிவுசெய்தனர். இவரே இச்சங்கத்திற்கு 1908ம ஆண்டு வரையும் இங்கிலாந்திற்கு போனபின்புகூட தலைவராயிருந்தார். இச் சபையின் சஞ்சிகைக்கும் (Ceylon National Review) இவர் டபிள்யு ஏ. டி. சில்வாவுடன் நெடுங்காலம் ஆசிரியராக விருந்தார்.

இச் சபையைக் கொண்டு நடத்துவதற்கு உத்தியோகத்தரோடு, ஒரு நிர்வாக சபையும், ஒரு ஆலோசனைச் சபையுமிருந்தன கௌரவ அங்கத்தவர்களுக்கும் இச்சபையிலிடமிருந்தது. இச் சபையோடு, அக் காலத்திலிருந்த முக்கிய சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஜெம்ஸ் பீரிஸ், டொனல்ட் ஒபயசேகரா, ஏ. பத்மநாப, சி. பாலசிங்கம், டி. பி. ஜயதிலகா, ஆர். எல். பெரேரா, எவ் ஆர். சேனநாயக்கா, போன்றவர்கள் உத்தியோகத்தவர்களாயும், நிர்வாகசபை அங்கத்தவர்களாகவுமிருந்தனர். சி. இ கொறியா, ஏ. நாகநாத முதலியார், ஏ. சபாபதி, அனகாரிக தர்ம்பாலா, எவ். எவ். லூட்லேட், எல். அப்துல்றகிமான் போன்றவர்கள் ஆலோசனைச் சபையிலிருந்தனர் லேடி குமாரசுவாமி (ஆனந்தகுமாரசுவாமியின் தாயார்) அவர் பெறிபிரபு, தாதாபாய் நவ்ரோஜி, அன்னி பெசன்ற் அம்மையார் செனால் லை கொற், சேர் சுப்பிரமணிய ஐயர் போன்றவர்கள் கௌரவ அங்கத்தவராயிருந்தனர் இப்படி அறிவிலும், ஆண்டிலும், அனுபவத்திலும் முதிர்ந்தவர்களைக் கொண்ட சபைக்கு, இருபத்தெட்டு வயது நிரம்பாத ஆனந்தகுமாரசுவாமி தலைவராக தெரிவுசெய்யப்பட்டாரென்றால், இது அவரிடத்து இப்பெரியார் கொண்டிருந்த மதிப்பையும், நம்பிக்கையையும் காட்டுகிறதல்லவா?

இச் சபையின் நோக்கங்கள் பின்வருமாறு:

(1) இலங்கை மக்களிடத்து காணப்படும் பழக்க வழக்கங்களில் வேண்டியமாற்றங்களை ஏற்படுத்தல் இலங்கையர் தேவையற்ற ஐரோப்பியரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதலைத் தடுத்தல்

(2) இலங்கை வாழ் பல்வேறு இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்த்தல்.

(3) பாளி, சமஸ்கிருதம், சிங்களம், தமிழ் முதலிய பாஷைகளையும் அவற்றிற் காணப்படும் இலக்கியங்களையும் படிப்பதற்கு ஊக்குவித்தல்

(4) தேசியக்கலைகள், சாத்திரங்கள் முதலியவற்றுக்கும் புத்துயிர் கொடுத்தல்.

(5) பழைய கட்டடங்களையும் கலைப்பொருட்களையும் பாதுகாப்பதற்கு உதவி செய்தல்.

மேலே கொடுக்கப்பட்ட கௌரவ அங்கத்தவர்களின் பட்டியலைக் கொண்டு, இச்சங்கம் இந்தியத் தலைவர்களோடு எவ்வளவு நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததென்பதை நன்கறியக்கூடியதாயிருக்கிறது.

இச்சமயம் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எடுத்த முயற்சிகளை இச் சங்கத்தின் சஞ்சிகையில் பரக்கக் காணலாம்.

ஆனந்தகுமாரசாமி கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்குச் சென்று அவ்வவ்விடங்களில் இலங்கைச் சமூக சீர்திருத்தச் சபையின் கிளைகளை தாபித்தனர். அவர் யாழ்ப்பாணம் வந்தபொழுது அவருக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பப் பற்றியும், அவர் ஆற்றியஉரைகளைபபற்றியும் அடுத்த கட்டுரையில் கவனிப்போம்.

---

# கண்ணால் காணமுடியாத கடவுளை எப்படி நம்புவது?

மேலே குறிப்பிட்ட கேள்வியை ஒரு வாலிபன், உலகினால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு துறவியிடம் கேட்டான். சுமார் நூறு வருடங்களுக்கு முன்என்றால் இந்தக் கேள்விக்கு விடைகூறுவது வேறுவிதமாக, இருக்கலாம். இந்த நாட்களில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளது. எதனையும் அது சமயக்கொள்கையாக இருந்தாலும் நம்ப விஞ்ஞான முறையான விளக்கம் தேவையாகின்றது.

அந்தத் துறவியிடம் கேட்கப்படும் எந்தக் கேள்விக்கும் விடை கிடைக்கும். அந்த விடையும் விளக்கமாகவும், உவமையுடன் கூடியதாகவும் இருக்கும்.

''உனது அன்னை இருக்கிறாளா?''– துறவி கேட்டார்.

''ஆம்'' வாலிபன் விடையிறுத்தான்.

''உனது தந்தையும் இருக்கிறாரா?''

''ஆம்''

''தயவுசெய்து அவர்களை நாளைக்கு இங்கு அழைத்து வருகிறாயா?''

வாலிபன் மனதில் பல சந்தேகங்கள் தோன்றின. ஆனாலும் ''நாளைக்கு நான் அவர்களை அழைத்து வருகிறேன்'' –அவன் பதிலிறுத்தான்.

மறுநாள் அவன் தனது பெற்றோர்களோடு துறவியின் இடத்திற்குச் சென்றான். துறவி அவர்களை பார்த்து சற்று சிந்திப்பவர்போல் காட்டிக்கொண்டார்.

''எங்கே உனது அன்னை'' வாலிபனை நோக்கிக் கேட்டார். வாலியன் ஆச்சரியத்துடன் தன் பக்கத்தில் நிற்கும் பெண்ணை சுட்டிக்காட்டினான்.

''அவர் உனது அன்னையென்பதை எவ்வாறு அறிந்து கொண்டாய்?'' – துறவி கேட்டார்.

வாலிபன் தடுமாறினான். இவ்வாறான கேள்வியை அவனிடம் முன்பு யாரும் கேட்டதில்லை.

'அவர் தான் எனது அன்னை''–வாலிபன் அவசரமாகப் பதிலளித்தான்.

''நீ அதை எந்த நிருபண மூலம் கண்டுபிடித்தாய்'' வாலிபன் முகம் சற்று கோபத்தைக் காட்டியது. துறவி தன்னைப் பரிகாசம் செய்வதாக நினைத்தான். ஆனால் துறவி மேலே தொடர்தார்.

''உன்னுடைய தந்தை யார்''

''இவர்தான்''–அவன் தனது தந்தையைச் சுட்டிக்காட்டினான்.

''எப்படித் தெரியும்? எந்த நிருபணமூலம் கண்டிபிடித்தாய்'' துறவி கேட்டான்.

வாலிபன் மேலும் சினமடைந்தவனாகக் காணப்பட்டான்.

துறவி அமைதியாகக் கூறினார். ''மகனே நான் உண்மையில் உனது அன்னையைப் பற்றியோ தந்தையைப் பற்றியோ சந்தேகம்கொண்டு கேள்வி கேட்கவில்லை. உண்மை இதுதான். உனது தாய்தந்தையரில் நீ நம்பிக்கை வைக்கமுன்பு ஒரு நிருபணத்தையும் ஆராயவில்லை. ஒரு வித ஆராய்ச்சியுமில்லாமல் அவர்களைப் பெற்றோர்கள் என ஏற்றுக்கொண்டாய். நம்பிக்கையால் ஏற்பட்ட இந்த அன்புத் தொடர்பின் பலன்களை வாழ்க்கையில் கண்டுள்ளாய். இதேபோன்றுதான் இறைநம்பிக்கையும். இறைவனைக் கண்டபின்புதான் அவனில் நம்பிக்கை வைப்பது என்பது உனது எண்ணமானால் இறைவனை ஒரு இடமும் காண முடியாது. வாழ்க்கையை வீணாக்குவதாகவே முடியும். நீ என்னை நம்பு, நான் கூறுவது உண்மை. நான் இறைவனைக் கண்டிருக்கிறேன். முதலில் இறைவனை உறுதியாக நம்பு. அப்போது நீ இறைவனைக் காண்பாய்''

இதை இன்னும் சற்று விரிவாக நோக்கலாம். எனது பாட்டன் - பாட்டி முதலியோரை நான் காணவில்லை எனவே அவர்கள் இருந்திருக்கவில்லை எனக் கூறமுடியுமா? பல்லாயிரக்கணக்கானோர் உலகில் வாழ்ந்து இறந்துபோனதெல்லாம் பொய்யாக அல்லவோ முடியும்.

நான் காண்பதைத்தான் நம்பமுடியும் என்னும் கொள்கை ஒரு பொய்யான நிலையில் தள்ளிவிடும். உன்னுடைய மூளையை என்னால் காணமுடிகிறதா? அதனால் அப்படியொன்றே இல்லையெனச் சாதிப்பதா? மனதிற்குரிய பழக்கவழக்கங்கள் முன்னோர் கூறிவைத்த உண்மைகளையே அடிப்படையாகக் கொண்டன. அவை ஒவ்வொன்றையும் ஆராயமுடியாது. அப்படி ஆராய்வது பழைய சந்ததியினர் எமக்குத் தம் அனுபவ மூலமாகத் தந்த பொக்கிஷத்தை இழப்பதற்கு வழிகோலும்.

ஒருமுகம்பார்க்கும் கண்ணாடி புழுதிப்படலத்தால் மூடப்பட்டிருக்குமாயின் எனது உருவத்தை அதில்காணமுடியாது. புழுதி சுத்தம் செய்யப்பட்டால் எனது உருவம் நன்கு தெரியும். கண்ணாடியும் முகமும் ஒரேவிதமாகத் தெரியும். இடையில் தடுப்பது புழுதிப் படலமேயாகும்.

ஒரு பூதக்கண்ணாடி மூலம் மிகச் சிறிய நுண்கிருமிகளைப் பார்க்கிறோம் எக்ஸ்றேமூலம்- உடலுள் இருக்கும் எலும்புகளைப் பார்க்கிறோம். தூரதிருஷ்டிக்கண்ணாடி மூலம் அதிதூரத்தில் உள்ள சாதாரண கண்களால் காணமுடியாத பொருட்களைப் பார்க்கிறோம் இந்த அனுபவங்களைக்கொண்டு கண்களால் பார்க்கமுடியாத எந்தப் பொருளையும் இல்லையெனக் கூறமுடியுமா?

ஸ்ரீ இராமகிருஷ்ணர் பின்வரும் ஓர் சிறந்த உதாரணத்தைத் தருகிறார். ''நாங்கள் இரவில் அளவற்ற நட்சத்திரங்கள் வானத்தில் பிரகாசிப்பதைப் பார்க்கிறோம். பகலில் அவற்றைப் பார்ப்பதில்லை. அதனால் நட்சத்திரங்களே இல்லையென்று கூறிவிடமுடியுமா? அதேபோல கண்களால் காணமுடியாத கடவுளை இல்லையென்று சொல்லமுடியுமா?''

விஞ்ஞானம் முன்னேற்றமடைய ஞானமும் அறிவும் பின்தங்குகின்றது. மேலும் இயற்கையின் இயல்புகளை அறிவதற்கு அதை விளக்குவதற்கு அதிக வல்லமையுள்ள கருவிகள் தேவைப்படுகின்றன. தேவசக்தியை அளக்க அவ்வாறான கருவிகளால் முடியுமா? மனுஷ சக்திகள் வெளிப்படையான அளவுகளில் எல்லையை உடையன தூரதிருஷ்டிக்கண்ணாடி முதலிய மனித கண்களின் சக்தியை விருத்தியாக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகையால் கடவுள் எம் கண்களுக்குத் தெரிந்தால்தான் நம்புவோம் என்று கூறுவது பிழையான கொள்கையாகும்.

ஒரு பிரகாசமான பகலில் நான் எனது கண்களை மூடிக்கொண்டு சூரியன் இல்லை என்று சொல்லிவிட முடியும். ஆனால் எனது கூற்று சூரியனை இல்லாமற்செய்துவிடாது. சூரியஒளி ஒரு வஸ்திரத்தில் தொடர்ந்து விழுந்தால் அதனை வெப்பமாக்கமுடியும். ஆனால் ஒரு குவி வில்லைக் கண்ணாடி மூலம் சூரியஒளி அந்த வஸ்திரத்தில் பாய்ச்சப்

(9ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்: ஏ. எல். வெங்கடேஸ்வரன்

தமிழ்: வ. குகசர்மா

நகைச்சுவை

# பேட்டிக்கு ஒரு போட்டி!

'மார்க்ட் வெயின்' என்பவர் பிரபல்யம்மிக்க அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர். எழுத்தில் மாத்திரமல்ல சொந்த வாழ்க்கையையே நகைச்சுவைமயமாக ஆக்கிக் கொண்டவர் அவர்.

ஒருமுறை பிரபல கைரேகை நிபுணர் 'கீரோ' விடம் சென்றார், மார்க்ட் வெயின். தாம் யார் என்று காட்டிக்கொள்ளாமலே கையைக் காட்டினார். 'கீரோ' சொன்னவைகளை எல்லாம் கேட்டுப் பிரமித்துப்போன மார்க்ட்வெயின் என்ன சொன்னார் தெரியுமா, ''காலத்தையும் காசையும், அநியாயமாக வீணடிக்கப் போகிறோமே என்று நினைத்துக்கொண்டு வந்தேன், நல்லகாலம் அப்படி ஆகவில்லை நல்ல கதை ஒன்று எழுத கருவூலம் கிடைத்துவிட்டது'' என்பதாகும். அதன்பிறகு கைரேகைகளைத் தொடர்புபடுத்தி நகைச்சுவையான நாவல் ஒன்றை எழுதினார் மார்க்ட் வெயின்.

புதிய வீடு ஒன்றைக் கட்டினார் மார்க்ட் வெயின். வீட்டின் முன் பக்கமே குசினி இருக்கும்படியாக அதனைக் கட்டுவித்தார். குசினியை முன்பக்கமாக ஏன் வைத்துக்கட்டுகிறீர்கள் என்று நண்பர்கள் கேட்டனர்.

''வீட்டுக்கு வருகிறவர்களில் அநேகம்பேர் என் மனைவியைப் பார்க்கவே வருகிறார்கள். குசினி முன்பக்கம் இருந்தால் அவளை வசதியாகப் பார்த்துக்கொள்ளலாமல்லவா'' என்று கேட்டார் மார்க்ட் வெயின்.

மார்க்ட்வெயினை பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டிகாணவந்தார். நிருபர் பட்டபாட்டை அவரே ஒரு கட்டுரையில் நகைச்சுவை ததும்ப எழுதியுள்ளார். அதனை இங்கே தருகிறோம். ஆ-ர்.

''தின இடி-மழை'' பத்திரிகையிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னார் அந்த இளைஞர். உங்களுக்கு சிரமம் இருக்காது என்று நினைக்கிறேன். உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.''

''என்ன காண வந்திருக்கிறீர்கள்?''

''பேட்டி... பேட்டிகாண,''

''ஓ! சரி, சரி. உம், சரி.''

நான் அன்று காலை உற்சாகமாக இருக்கவில்லை. கொஞ்சம் அசதியாக இருந்தது. புத்தக அலமாரியருகே நின்று ஐந்தாறு நிமிஷங்கள் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். மெதுவாகக் கேட்டேன்.

''அதை எப்படி எழுதுவீர்கள்?''

''எதை?''

''பேட்டி என்பதை.''

''என்ன சொல்லுகிறீர்கள்? புரியவில்லையே! பே...ட்...டி... இந்தப் பேட்டி விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! பிரபலமாக விளங்கும் பிரமுகர்களைப் பேட்டி காண்பது ஒரு சம்பிரதாயம் இல்லையா?''

## மார்க்ட் வெயின்

''ஆமாம் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''அடடா; எப்படிச் சொல்வது என்று தெரியவில்லையே. வழக்கமாக, பேட்டி காண்பவர்தான் கேள்வி கேட்பார். பேட்டி கொடுப்பவர் விடை தருவார் இதுதான் இப்போது எங்கும் வழக்கம். உங்களுடைய பொதுப்பணியும் சொந்த வாழ்க்கையும் பற்றி நான் இப்போது கேட்டுத் தெரிந்துகொள்ளலாமா?''

''ஓ, தாராளமாக. என் ஞாபகசக்திதான் மோசம்! மோசம் என்றால் ரொம்ப மோசம்! சிலசமயம் விடுவிடு என்று பல விஷயங்கள் ஒன்றாக நினைவுக்கு வரும். சில சமயம் ஒன்றுமே வராது.''

''பரவாயில்லை ஐயா. உங்களால் முடிந்தளவு ஞாபகப்படுத்திக்கொண்டு சொல்லுங்கள் போதும். தொடங்கலாமா?''

''தொடங்கலாம்.''

கேள்வி: உங்கள் வயது என்ன?

பதில்: அடுத்த ஜூன் மாதம் பத்தொன்பது ஆகிறது.

கேள்வி: என்னது? முப்பத்தைந்தாவது இருக்கும் என்று நினைத்தேன். எங்கே பிறந்தீர்கள்?

பதில்: மிஸௌரியில்.

கேள்வி: எப்பொழுது நீங்கள் எழுதத் தொடங்கினீர்கள்?

பதில்: 1836-ம் வருஷம்.

கேள்வி: அப்படியானால் உங்களுக்கு இப்போதுதானா பத்தொன்பது வயதாகிறது?

பதில்: தெரியாது. இது விசித்திரமாகத்தானிருக்கிறது.

கேள்வி: விசித்திரம்தான். நீங்கள் சந்தித்த பிரமுகர்களில் குறிப்பிடத்தக்கவர் யார்?

பதில்: ஆரன் பர்.

கேள்வி: உங்களுக்கு வயது பத்தொன்பது தான் என்றால் நீங்கள் ஆரன் பர்ரைப் பார்த்திருக்கவே முடியாதே.

பதில்: என்னைப் பற்றி எனைவிட உங்களுக்கு அதிகம் தெரியுமானால் என்னை ஏன் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்?

கேள்வி: இல்லை. பேச்சுக்குச் சொன்னேன். நீங்கள் ஆரன் பர்ரை எப்போது சந்தித்தீர்கள்?

பதில்: அவருடைய சவ அடக்கத்துக்குப் போயிருந்தேன். அப்போது என்னைப் பார்த்துச் சத்தம்போடாதே என்றார்.

கேள்வி: என்னது! நீங்கள் அவர் சவ அடக்கத்திற்குப் போயிருந்தீர்கள் என்றால் அவர் இறந்திருக்கவேண்டும். இறந்துபோனவருக்கு நீங்கள் சத்தம்போட்டால் என்ன, போடாவிட்டால் என்ன?

பதில்: தெரியாது. அவரைத் தான் கேட்கவேண்டும். விசித்திரமான மனிதர்தான் அவர்.

கேள்வி: எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் உங்களுடன் பேசினார் என்கிறீர்கள். இறந்துவிட்டார் என்றும் சொல்கிறீர்கள்!

பதில்: இறந்துவிட்டார் என்று நான் சொல்லவில்லையே.

கேள்வி: அப்படியானால் அவர் இறக்கவில்லையா?

பதில்: அவர் இறந்ததாகச் சிலர் சொன்னார்கள். சிலர் இல்லை என்றார்கள்.

கேள்வி: நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: எனக்கென்ன வந்தது. அது எனது சவ அடக்கச் சடங்கா என்ன.

கேள்வி: நீங்கள்... சரி, சரி, இதற்கு ஒரு முடிவே இராது. வேறு விஷயம் பேசுவோம். நீங்கள் பிறந்த தேதி எது?

பதில்: திங்கள் கிழமை. வருஷம் 1693. அக்டோபர் 31.

கேள்வி: இருக்கவே இருக்காது. அதுதான் பிறந்த தேதி என்றால் உங்களுக்கு இப்போது நூற்று எண்பது வயது ஆகிறது. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

பதில்: ஒன்றும் சொல்லவில்லை.

கேள்வி: முதலில் உங்களுக்கு வயது பத்தொன்பது தான் என்றீர்கள். இப்போது நூற்றெண்பது என்கிறீர்கள். ரொம்ப வித்தியாசம் இருக்கிறதே.

பதில்: (பாராட்டுமுகமாக அவர் கரத்தைப் பற்றிக் குலுக்கியபடி); அட, நீங்கள் அதைத் தெரிந்துகொண்டு விட்டீர்களே! எனக்கே இது அடிக்கடி விசித்திரமாகத் தோன்றும். ஆனால் பொருட்படுத்தமாட்டேன். நீங்கள் ஒரே நிமிஷத்தில் கண்டுபிடித்துவிட்டீர்களே.

கேள்வி: அதிருக்கட்டும்... உங்களுக்கு] அண்ணா, தம்பி, அக்கா, தங்கை யாராவது உண்டா?

பதில்: உம்... இம்... ஆமாம் எனக்குச் சரியாக நினைவில்லை.

கேள்வி: ரொம்ப விசித்திரமாக இருக்கிறதே நீங்கள் சொல்வது!

பதில்: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

கேள்வி: வேறு எப்படிச் சொல்வது? இதோ, இது யார் இந்தப்படத்தில்? இது உங்கள் சகோதரரா?

பதில்: ஆ! ஆமாம், ஆமாம். ஞாபகம் வந்துவிட்டது. அவன் என் சகோதரன்தான். பெயர் வில்லியம்- ''பில்'' என்று செல்லமாகக் கூப்பிடுவோம், பாவம்!

கேள்வி: ஏன் பாவம் என்கிறீர்கள்? இறந்துவிட்டாரா என்ன?

பதில்: அப்படித்தான் இருக்கவேண்டும். நிச்சயமாகச் சொல்லமுடியாது. அதைப் பற்றி ஒரு மர்மம் நிலவுகிறது.

கேள்வி: ரொம்ப வருத்தமான விஷயம்தான். அவர் காணாமல் போய்விட்டாரா?

பதில்: அப்படிச் சொன்னாலும் ஒருவிதத்தில் பொருந்தும். நாங்கள் அவனைப் புதைத்துவிட்டோம்.

கேள்வி: புதைத்துவிட்டீர்களா? ஆசாமிக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமலா புதைத்துவிட்டீர்கள்?

பதில்: இல்லை, இல்லை, அவன் இறந்துவிட்டது நிச்சயம்தான்.

கேள்வி: மன்னிக்கவேண்டும். எனக்கு அர்த்தமாகவில்லை. அவனைப் புதைத்துவிட்டீர்கள், அவன் இறந்ததும் நிச்சயம் என்றால் இதில் மர்மம் என்ன?

பதில்: ஆம்; அதுதான், மர்மம்! அதாவது நாங்கள் இருவரும் இரட்டையர்; அவனும் நானும் பிறந்த இரண்டு வாரங்களில் குளிக்கும் தொட்டியில் ஆள்மாறாட்டம் ஆகிவிட்டது. இரண்டுபேர்களில் ஒருவர் நீரில் மூழ்கிவிட்டோம். அது யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. சிலர் அது பில்தான் என்கிறார்கள். வேறு சிலர் இறந்துபோனது நான்தான் என்கிறார்கள்.

கேள்வி: வேடிக்கைதான்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: என்ன நினைப்பது? உண்மை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள என்ன வேண்டுமானாலும் தரத்தயார். இந்த ஆழ்ந்த மர்மம் என் ஆயுள் முழுவதும் ஒரு கரும் நிழலாகவே என்னைத் தொடர்கிறது. உங்கள் காதோடு ஒரு ரகசியம் சொல்கிறேன். இதுவரை யாரிடமும் சொல்லவில்லை. எங்கள் இருவரில் ஒரு குழந்தைக்கு இடது முழங்கையில் ஒரு பெரிய மச்சம் இருக்கும். அந்தக் குழந்தை தான் நான். அந்தக் குழந்தை தான் நீரில் மூச்சு முட்டிச் செத்தது.

கேள்வி: அப்படியானால் இதில் மர்மம் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

பதில்: இது தெரியவில்லையா? எங்கள் வீட்டுப் பெரியவர்கள் தவறாக ஒரு குழந்தையை எப்படி சவ அடக்கம் செய்துவிட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இதை வெளியே சொல்லிவிடாதேயும். என் குடும்பத்தினர் ஏற்கனவே பல விஷயங்களில் மனம் நொந்திருக்கிறார்கள்.

கேள்வி: இப்போது ஒரு பேட்டிக்குத் தேவையான குறிப்புக்கள் கிடைத்துவிட்டன என்று நினைக்கிறேன். உங்கள் உதவிக்கு நன்றி.

அந்தப் பத்திரிகை நிருபர் மௌனமாக, மரியாதையுடன் விடைபெற்றார். அவர் இருந்தவரை நன்றாகப் பொழுது போயிற்று அவர் எழுந்து போகிறாரே என்று இருந்தது எனக்கு.

[தமிழாக்கம்: தம்பி சீனிவாசன்]

---

# தேநீரை சுவையாக தயாரியுங்கள்!

சுவையான தேநீர் தயாரிப்பதற்கு என்ன பாத்திரத்தைப் பயன்படுத்துகிறீர்கள்? பீங்கான், கண்ணாடி, கறைபிடியா உருக்கு. வெள்ளிப் பாத்திரங்களே நல்லது. அலுமினியம், தகரம் ஆகிய உலோகங்களாலான பாத்திரங்களை பாவிக்கலாகாது. இவை உலோக மணத்தைத் தேநீரில் கலந்துவிடும்.

தேயிலை பாக்கட்டுகளை அடுப்புக்கட்டு, மற்றும் வாசனைப் பொருட்கள் உள்ள இடத்தில் வைத்திருக்காதீர்கள். அதன் மணம் மாறிவிடக்கூடும்.

எப்பொழுதுமே சுத்தமான புதிய தண்ணீரையே பாவிக்கவேண்டும். ஏற்கனவே எடுத்து வைத்த தண்ணீர் அல்லது கொதித்து ஆறிய தண்ணீர் சுவையைக் கெடுத்துவிடும். தேநீர் தயாரிக்கும் பாத்திரத்தை முதலில் கொதி நீரால் நிரப்பி பின்னர் ஊற்றிவிட்டு தேநீர் தயாரிக்க பயன்படுத்துங்கள். தேயிலையை அளவாகப்பயன்படுத்துங்கள். தண்ணீரை நன்றாகக் கொதிக்கவிட்டு அதை தேநீர் பாத்திரத்திலுள்ள தேயிலையின் மீது ஊற்றுங்கள். பின்னர் மூன்று, ஐந்து நிடங்களுக்கு பொறுத்திருங்கள். தேநீரில் சாயம் அதிகம் என்று தோன்றினால் மேலும் கொதி நீரைக் கலந்துகொள்ளுங்கள். கோப்பையில் ஊற்றுமுன் நன்றாகக் கலக்கிக்கொள்ளுங்கள்.

அவசரமாக வீட்டில் தேநீர் ஊற்றிக்கொள்ளக் குறுக்குவழி ஒன்று உண்டு. எத்தனை கோப்பைதேநீர்தேவை என்று கணக்குப்போட்டுக்கொண்டு கேத்தலில் அந்த அளவு தண்ணீரைஊற்றி கொதிக்க வையுங்கள். நன்றாகக் கொதிக்கும்போது ஒரு கப்புக்கு கால் கரண்டி வீதம் தேயிலையை அளந்து அதில்போடுங்கள். உடனே இறக்கி தேநீர் தயாரிக்கும் பாத்திரத்தில் ஊற்றிவிடுங்கள். இல்லையெனில் தேநீர் துவர்க்கும். இன்னும் தேவையானால் கேத்திலிலேயே தண்ணீருடன் சீனியையும் போட்டுக்கலக்கிக் கொள்ளலாம். அளவாக பால் சேர்த்துக்கொண்டால் தேநீரின் சுவை குறையாது.

—வ-ம்

---

## செம்பருத்தி

இது ஒரு பூ. இதை செம்பரத்தை என்றும் சப்பாத்திப் பூ என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் ஷூபிளவர் என்றும் தெலுங்கில் தசானி பூலு என்றும் கூறுவர். இது பூசைக்குரியது. இதை ஜப புஷ்பம் என்பர்.

இது சிவப்பு நிறத்த தாய் ஒற்றையிதழாயும் அடுக்கு இதழாயும்இருக்கும். இதன் உபயோகங்கள் பல. மருந்துக்கும் உணவுக்கும் பயன்படும் இப்பூ எண்ணெயிலிட்டுத் தைலங்கள் வடிக்கவும் உபயோகமாகும்.

எக்காலத்திலும் கொழு கொழு என வளரும் இச்செடியின் பூவும் கொழ கொழ என வழு வழுப்பாக இருக்கும். இதை நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தலைக்குப் பூசுவதுண்டு.

இதை உஷ்ணசம் மாரி என்று வைத்தியர் குறிப்பதால், இது சூட்டைத் தணிக்கும். இதை நீரிலிட்டுக்காய்ச்சி வடித்துப்பருகினால் சுரம் குணமாகும். இதனால் கல்லீரல், இருதயம், நீர்ப்பை முதலியன சுத்தமாகும். குழந்தைகளின் கணைச்சூட்டுக்கும் இருதயநோய்ப்புக்கும் இப்பூவு மிகவும்நல்லது. இதை அரைத்துப் பாலிற் கலக்கிப் பருகினால்சிறுநீர் சம்பந்தமான எரிவு நீங்கும் இதைச் சம்பலாகவும் வதக்கி வறையாகவும் குழம்பாகவும் சமைப்பர். இதனாற் குணமுண்டு.

(மில்க்வைற் செய்தி)

# வானொலி நாடகம் எழுதுவது எப்படி-4

## சூழ்நிலையை விளக்கும் உத்தி

ஒருவேளை மோகன் சிகரட் பிடிப்பது பொன்னம்மாளுக்கு விருப்பமில்லாது இருக்கலாம் அல்லது அதனால் மோகனுக்கு ஏதாவது கெடுதல் ஏற்பட்டிருக்கலாம் என்று கதையில் வருவதானால் அதை எப்படி உணர்த்தலாம் என்பதையும், இந்தச் சப்தத்தை அமைக்கும் விதத்தையும் கவனிப்போம்:

மோகன்: (தொடர்ந்து இருமிக்கொண்டிருக்கிறான்).

பொன்ன: (வந்துகொண்டே) மோகன், என்னடா இது. உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாயே இப்படி இருமி இருமிக்கொண்டே சிகரெட்டை ஊதித் தள்ளுகிறாயேடா. இந்தப் பொன்னம்மாளுக்கு மகனாகப் பிறந்து ஏனடா என்னை வதைக்கிறாய்?

(சிகரட் டின்னைத் தட்டி விழுத்தும் சத்தம்)

பொன்ன: இந்தச் சிகரட் டின் இங்கே இருந்தால்தானே நீ புகைப்பாய். இனி அதைத் தொடவே கூடாது.

(மோகன் இருமுகிறான்)

இந்தக் கேட்பவர்களுக்கு இந்தச் சூழ்நிலை மிகவும் இலகுவாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

பின்வரும் உதாரணங்களையும் மனதில் இருத்திக்கொள்வது நன்று.

### ஓர் அலுவலகச் சூழ்நிலையை உணர்த்தல்

டெலிபோன் மணி ஒலித்தல், தட்டச்சுயந்திரம் (Type-writer) இயங்கும் ஒலி, அழைப்பு மணி (Calling Bell) போன்ற ஒலிக் குறிப்புகளாலும் அதனோடு தொடர்புபட்ட வசனங்களாலும் வெகு சுலபமாக உணர்த்திவிடலாம்.

### ஒரு கல்யாணவீட்டுச் சூழ்நிலையை உணர்த்தல்

இருக்கவே இருக்கிறது நாதஸ்வர இசைத் தட்டுக்கள். இவற்றினோடே ஜன ஆரவார ஒலியையும் சேர்த்துக்கொண்டு ஒரு கல்யாணத்தை வெகு சிறப்பாகச் சில வினாடிகளில் நடத்தி முடித்துவிடலாம். வசனங்களைப் பொருத்தமாக எழுதிவிடவேண்டும்.

இப்படியே எல்லாவற்றுக்கும் உதாரணங்கள் எழுதுவதனால் அதுவே ஒரு தனிக் கட்டுரையாக அமைந்துவிடும்.

### அடைப்புக் குறிக்குள் அறிவுறுத்துரைகள் எழுதவேண்டியது அவசியம் தானா?

இந்த அறிவுறுத்துரைகள் நடிகர்களுக்கும் தயாரிப்பாளருக்கும் பேருதவியாக இருக்கும் என்பதோடு, நாம் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று கதை நிகழுமிடம், சூழல், நேரம் என்பனவற்றைச் சுலபமாக உணர்த்த உதவும் இதை இன்னும் சற்று விரிவாகக் கவனிப்போம். முதலில் கதை நிகழுமிடத்தை உணர்த்தும் விதத்தைப் பார்ப்போம்.

ஒரு கோவிலில் நடைபெறுகின்ற சம்பவம் என்று வைத்துக்கொண்டால், அடைப்புக் குறிக்குள்:

(கோவில் மணியோசை-தொடர்ந்து ஜன ஆரவாரச் சத்தம்) என்று எழுதினால் கதை நிகழுமிடம் ஒரு கோவில் என்பது தானாகவே புரிந்துவிடும். இதையே இன்னும் விரிவாக அவரவர் கற்பனை வளத்திற்கேற்ப எழுதலாம்.

உதாரணமாக: (கோவில் மணியோசைச் சத்தம் தொடர்ந்து ஜன ஆரவாரம். இடையிடையே பக்தர்களின் அரோகராச் சத்தம், காவடி இசை, பஜனைச் சத்தங்கள்) என்று இப்படியே இடத்திற்கேற்ப புகுத்திக்கொள்ளலாம். இதுவே ஒரு கிறிஸ்தவக் கோவிலாக இருக்கவேண்டுமானால்?

(கிறிஸ்தவ ஆலய மணியோசையைத் தொடர்ந்து ஜெபம் பண்ணும் சத்தம். பாடற்பூசை நடைபெறுவதைக் காட்டுவதற்கான இசை) என்று எழுதலாம்.

ஒரு இலக்கிய நாடகத்தில் காதலனும் காதலியும் தனிமையில் சந்திக்கின்றனர். இதை உணர்த்துவதற்கு: (குயில் கூவும் சத்தம். குருவிகளின் கீச்சொலி, அருவி பாயும் சத்தம்) என்று எழுதினால் கதை நிகழிடம், சூழல் தானே புரிந்துவிடாதா? ஆனால் அடுத்து வரும் உரையாடலிலும் சூசகமாக இந்த ஒலிக் குறிப்புகளையும் சேர்த்துவிடுதல், உங்கள் திறனை மேலும் வெளிப்படுத்தும்.

உதாரணமாக:

காதலன்; பூங்குழலி, மந்த மாருதம் தவழும் இந்த நந்தவனத்திலே எமது தனிமையைக் குழப்பக்கூடாது என்று பறவை இனங்கள் இரகசியம் பேசுகின்றன பார்த்தாயா?

காதலி: இல்லை அன்பரே! இந்த மயக்கும் மாலைப்பொழுதில் எம்மை மகிழ்விக்க வேண்டி குயில் கீதமிசைக்கின்றது. பறவை இனங்கள் பக்க வாத்தியங்கள் இசைக்கின்றன.

காதலன்: (சிரிப்புடன்) பூங்குழலி, அருமையான கற்பனை வா சற்றுநேரம் இந்த அருவியில் நீராடி மகிழ்வோம்.

(அருவி பாயும் சத்தம்)

இந்த உதாரணங்களை மனதில் வைத்துக்கொண்டால் பிரமாதமான வானொலி நாடகங்களை எழுதி விடுவீர்கள்.

கதை நிகழுமிடத்தை உணர்த்துவது எவ்வாறு என்பதைத் தெரிந்துகொண்டோம். இதே போன்று கதை நிகழும் நேரத்தைக் குறிப்பிடுவது இன்னும் சுலபமானது. அதிகாலை என்றால் கோழிகூவும் சத்தத்தை உபயோகிக்கலாம். அல்லது காகம் கரைவதைச் சேர்க்கலாம். இரவு என்றால் (இரவுநேரத்தைக் குறிக்கும் இரவு சில பூச்சிகளின் சத்தம்) என்று குறிப்பிடலாம் நடு இரவு என்றால் சில நாய்களின் ஊளையிடும் சத்தத்தை உபயோகித்து "இந்த நடுச்சாம வேளையில் இந்த நாய்கள் ஏன் ஊளையிடுகின்றன என்று உரையாடலையும் எழுதினால் மிகவும் பொருத்தமாக அமைந்துவிடுமல்லவா?

இப்படியாக ஒலிக்குறிப்புக்களின் உபயோகம் அத்தனையையும் பற்றி விளக்குவது எளிதன்று அவசியமுமன்று. இந்த முறையைத் தெரிந்து கொண்டால் பின்னர் நீங்களே புதிய புதிய உத்திகளைக் கையாளத் தொடங்கிவிடுவீர்கள்

இதுவரை நாம் அடைப்புக் குறிக்குள் கொடுத்த அறிவுறுத்துரைகள் யாவும் பெரும்பாலும் தயாரிப்பாளருக்குதவக் கூடியதாகவே அமைந்தது. இதே போன்றுதான் நடிகர்களுக்குரிய அறிவுறுத்துரைகளும் அடங்கும். பின்வரும் அடைப்புக்குறிக்குள் இருப்பதை அவதானியுங்கள்:

(முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டே)
(கைகளால் சைகை காட்டிய வாறே)
(இருகைகளாலும் கட்டியணைத்தவாறே)
(தேநீர் கோப்பையைக் கையில் வைத்துக்கொண்டே)
(கனிவான பார்வையுடனே)
(கண்களை மூடியபடி தியானத்தில் இருந்து கொண்டே)
(சிகரட் புகைத்துக் கொண்டே)

இவைபோன்ற அறிவுறுத்துரைகள் வானொலி நாடகங்களுக்கோ, வானொலி நடிகர்களுக்கோ பயன்படா என்பதை இதுவரை உணர்ந்து கொண்டிருப்பீர்கள். எனவே எவ்வகையான அறிவுறுத்துரைகளை உபயோகிக்க வேண்டுமென்பதைக் கவனிப்போம்:-

(வந்துகொண்டே)
(போய்க்கொண்டே)

என்று உரையாடலின் ஆரம்பத்தில் அல்லது இடைநடுவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சரியா? நடிகர்கள் வருவதையும் போவதையும் வானொலியில் எப்படிக்காட்ட முடியும் என்று நீங்கள் சிந்திக்கலாம். வருவதையும் போவதையும் காண்பிக்க முடியாதுதான். ஆயின் உணர்த்தமுடியும் ஆகவே இது சரியான முறையே. நடிகர்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டும் வசனங்களைப் பேசும் பொழுது கேட்பவர்கள் குரல்களின் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டு இதை உணர்தல் சாத்தியமாகும்.

வந்துகொண்டும் போய்க்கொண்டும் என்று எழுதினால் நடிகர்கள் எங்கே இருந்து வருவது எங்கே போவது என்று பலர் வினவெழுப்பலாம். இதைச் சிறிது விபரமாகச் சொன்னால் நன்மைபயக்குமென்று நம்புகிறேன். உங்களில் பலருக்கு வானொலி நிலையத்துக்குச் சென்று நாடக ஒலிப்பதிவுகளைப் பார்க்கும் சந்தர்ப்பங் கிடைத்திருக்க முடியாது. ஆனால் அது வானொலி நாடகம் எழுதுவதற்கு எந்தவிதமாகவும் இடையூறாக இருக்குமென்று எண்ணிவிடக்கூடாது. வானொலி நடிகர்கள் மேடையில் நடிப்பது போன்று, அங்க அசைவுகள், முகபாவங்கள் காட்டி நடிப்பதில்லை அது அவசியமுமில்லை. அவர்கள் ஒலிவாங்கிக்கு (Microphone) முன்னர் நின்று மைக்கைப் பார்த்தே தான் நடிப்பர். மேடை நாடகங்கள் போல் வசனங்களைப் பாடமாக்க வேண்டிய நிர்ப்பந்தமுமில்லை. (வந்துகொண்டு) என்று குறிப்பிட்டிருந்தால் ஒலிவாங்கிக்குச் சற்றுத் தூரத்திலிருந்து வந்துகொண்டே வசனத்தைப் பேசுவர். போய்க்கொண்டு என்றாலும் ஒலிவாங்கியிலிருந்து சற்றுத்தூரத்துக்கு பேசிக்கொண்டே செல்வர்.

இப்படி வந்துகொண்டு போய்க்கொண்டு என்று எழுதாமல் தொழில் நுட்ப உதவியாளர் நடிகர்களின் குரலைக் கூட்டிக்குறைத்தும். இந்த உணர்வை ஏற்படுத்துவது சாத்தியமே. ஆயினும் இது பற்றி ஆரம்ப எழுத்தாளர்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

"வ'ரணியூரான்"

---

# ஆவியுலகத் தொடர்பு—5

## வழிகாட்டும் ஆவி!

**வி. ரவிச்சந்திரன்**

மீடியமாக இருப்பவர்கள் பலவிதமான ஆவிகளை அழைத்துப் பேசுவார்கள். இதுதவறு. ஆவிகளில் நல்லவைகளும் உண்டு. கெட்டவைகளுமுண்டு எனவே எந்த மீடியமும் நேரடியாக ஆவிகளைப் பெயர் சொல்லி அழைத்துப்பேசும் முறையை விட்டுவிடவேண்டும். பின் எப்படி ஆவிகளை அழைப்பது?

ஆவி உலகில் நமக்கு ஒரு தோழனையோ தோழியையோ நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும்.

அது எப்படி?

மீடியமாக இருப்பவர்கள் தினசரி ஆவிகளிடம் பேசும் போது எல்லா ஆவிகளைக் காட்டிலும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆவி அதிகப் பரிச்சயமாகி இருக்கும். எப்போது கூப்பிட்டாலும் அதுவே முதலில் பேச வரும். வரவேண்டும். இந்த ஆவி இறந்து போன நம் உறவினராயும் இருப்பதுண்டு. அல்லது முன்பின் தெரியாது ஆவியுலகத் தொடர்பு ஏற்பட்டபின்பு அறிமுகமான ஆவியாகவும் இருப்பதுண்டு. இதை ஆங்கிலத்தில் Guiding Sprit என்றும் தமிழில வழி காட்டும் ஆவி என்றும் சொல்வர். இந்த வழிகாட்டும் ஆவியின் சக்தியை பொறுத்தே அதைச் சார்ந்திருக்கும் மீடியத்தின் ஆவியுலக முன்னேற்றம் அமையும். இந்த வழிகாட்டும் ஆவியின் அ.லு யம் என்ன?

ஆவிகள் எல்லாமே ஒரே இடக்கில் இருப்பதில்லை என்று முன்பே கூறியிருக்கிறேன் பூமியில் அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப முறையே புண்ணியலோகம்–மத்தியலோகம் – பாவலோகங்களில் தாங்கள் வாழ்வதாக ஆவிகள் கூறுகிறார்கள். நாம் ஆவிகளை நேரடியாக அழைக்கும் போது அழைக்கப்படும் ஆவி புண்ணிய லோகத்தில் இருந்தால் நம் அழைப்பைத் தெரிந்து கொண்டு உடனே வரும். மற்ற உலகங்களில் இருந்தால் வருவது தாமதப்படும். வராமலும் இருக்கும். (இதற்குக் காரணங்கள் பல உண்டு)

இதைப் போன்ற சமயங்களில் நம் வழிகாட்டும் ஆவியிடம் நாம் பேச விரும்பும் ஆவியைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்தால் அது குறிப்பிட்ட உலகத்திற்குச் சென்று அழைத்துவரும். சில ஆவிகளுக்கு அடிக்கடி பூமிக்கு வர அனுமதி கிடையாது. சில புண்ணியலோக ஆவிகளே கூட பூவுலகுடன் தொடர்பு கொள்ள விரும்புவது கிடையாது. அப்படிப்பட்ட ஆவிகளுடன் பேச என்ன செய்வது? அப்போதும் இந்த வழி காட்டும் ஆவி உதவிசெய்கிறது. நம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு போய் அந்த ஆவியிடம் இருந்து அதற்கான பதிலை வாங்கி வந்து நமக்குத் தருகிறது.

பொதுவாக புண்ணிய லோக ஆவிகள் தவிர மற்ற கீழ் நிலை ஆவிகள் பேசவரும் போது மீடியத்தின் உடலில் இருந்து அதிக சக்தியை உபயோகிக்கிறார்கள். அந்தச்சமயங்களில் உடல் சோர்வடைவதை மீடியம் நன்கு உணரலாம். குறிப்பாக பாவலோக ஆவிகள் பேசும் போது உடலில் வலி கூட ஏற்படும். நாளடைவில் உடல் நலிவு ஏற்படும். பொதுவாக பாவலோக ஆவிகளிடம் பேசினால் மீடியம் தன்மையே கூட குறையும். அது சரி, புண்ணிய லோக ஆவி எது? பாவலோக ஆவி எது? என்று நாம் எப்படி கண்டுபிடிக்கலாமெனக் கேட்கலாம். அதையும் வழி காட்டும் ஆவியே சொல்கிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வழி காட்டும் ஆவி இல்லாமலேயே அப்போதைக்கு எந்த ஆவி வருகிறதோ அதனுடன் பேசும் மீடியங்கள் பலர் உள்ளனர். இது தவறு. இப்படிப் பேசும் போது மிகவும் நல்ல குணம் உடைய ஆவிகளும் வரும், மிகவும் கெட்ட குணமுடைய ஆவிகளும் வரும். அது ஒரு காலத்தில் கொலை பாதகனாக இருந்தவனின் ஆவியாக இருக்கலாம்–அல்லது பழிவாங்கும் எண்ணமுடையதாக இருக்கலாம் அல்லது குறும்புக்காரனாக இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் நம்முடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு நம்மை விட்டு அகலாமல் நம்மை அடிமையாக்கிவிடும் வாய்ப்பு உண்டு. ஆனால் வழி காட்டும் ஆவி மூலம் பிற ஆவிகளை அழைத்தோமானல் இவர்கள் பேசி முடித்துச் செல்லும்வரை அது நம்மைப் பாதுகாக்கிறது. இப்படிப்பட்டவர்களின் தொடர்பு நமக்குக் கிடைக்காமலேயே செய்துவிடுகிறது.

### உதவியும் செய்யும்

இந்த வழி காட்டும் ஆவி மிகவும் சக்தியுடையதாகவும் எதிர்காலம் அறியக்கூடியதாகவும் இருந்துவிட்டால் அந்த மீடியத்திற்கு வேறு துணையே வேண்டியதில்லை. மீடியத்தினுடைய வாழ்க்கையில் சகல விதத்திலும் உதவிசெய்கிறது. தமிழ் நாட்டில் அரசாங்க அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் நண்பர் ஒருவருக்கு அலுவலக சோதனை சமயங்களில் (Inspection) அதிகாரி இவரிடம் மட்டும்சுமுகமாகப் பேசியதைக்கண்டு மற்றவர்கள் விழித்த செய்தியும்–அலுவலகத்தில் மலை போன்று குவிந்து கிடந்த பைகளை (File) இரண்டே தினத்தில் அந்த நண்பர் எப்படி எழுதி முடித்தார் என்று மற்றவர்கள் வியந்த செய்தியும் இதைப் படிப்பவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். இன்னொரு உதாரணம் தஞ்சாவூரில் வசிக்கும் மீடியம் ஒருவர் கோடைக்கால இரவில் ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு ஓய்வாகப் படுத்திருந்தார். அப்போது அவருடைய இரண்டு வயதுக் குழந்தை அவசரமாக வந்து அவருடைய தலைமுடியைப் பற்றி இழுத்தது. அது ஏதோ ஒரு பலம் மிக்க மனிதர் இழுப்பதைப் போல் இருந்ததால் வலி பொறுக்க முடியாமல் எழுந்து உட்கார்ந்தார். அவர் எழுவதற்கும் அவரது தலையணையில் கூரையிலிருந்து பெரிய தேள் ஒன்று விழுவதற்கும் சரியாக இருந்தது இவர் படுத்திருந்தால் தேள் இவரது தலையில்

(8-ம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தல் முடிவுகள்: - ஒரு கண்ணோட்டம்

**உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் மக்கள் தங்கள் வாக்குரிமை மூலம் அண்மையில் ஏற்படுத்திய அமைதிப் புரட்சியை யடுத்து, அதன் அண்டை நாடான இலங்கையிலும் அதேவிதத்தில்-உலகின் கவனத்தை ஈர்த்து ஓர் அமைதிப் புரட்சியை நடந்து முடிந்த பொதுத் தேர்தல் மூலம் மக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்!**

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் மாறி மாறி ஆட்சி பீடமேற்றும் கடந்த கால இலங்கையின் அரசியல் வரலாறும், ஒரு மாற்றத்தை விரும்பும் மக்களின் இயல்பான மனப்பாங்கும், இவற்றைவிட இந்திய தேர்தல் முடிவுகளின் தாக்கமும் இத்தேர்தலில் ஐக்கிய தேசி கட்சியே ஆட்சிபீடமேறுவதற்கு ஏற்கனவே 'கட்டியம்' கூறி நின்றாலும் நடைபெற்று முடிந்த தேர்தலின் முடிவுகள் இந்தச் சம்பிரதாயங்களை மட்டுமே சார்ந்ததாக இருக்கவில்லை. எதிர்பாராத பல முடிவுகளை தேர்தல் முடிவுகள் தந்தன. அவை உலகநாடு நாடுகளின் அரசியல் அவதானிகளையே வெகுவாக ஈர்க்கும் விதத்தில் அமைந்திருந்தன.

கடந்த அரசாங்கத்தில் முக்கிய எதிர்க்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக்கட்சி, நாட்டில் முன்னெப்போதும் இல்லாதவகையில் நான்கில் மூன்று பங்கு ஸ்தானங்களைக் கைப்பற்றி ஆட்சிப்பொறுப்பேற்ற அதேவேளை, ஆளுங்கட்சியாகவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி கண்டது. தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி பெற்று தேசிய அரசுப்பேரவையில்பிரதான எதிர்க்கட்சியாகும் பலத்தைப்பெற்று விளங்குகின்றது. இடதுசாரிகள் எவருமே தேர்தலில் வெற்றிபெறவில்லை.

1970-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) ஆகியவற்றுடன் பொதுவேலைத் திட்டத்தின் கீழ் கூட்டுச்சேர்ந்து மூன்றில் இரண்டு அதிகப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்து 1972-ல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து நாட்டை விடுவித்து, குடியரசாகப் பிரகடனம் செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினது பலத்த தோல்வியையும், 1970 பொதுத்தேர்தலில் 17 ஸ்தானங்களில் மட்டுமே வெற்றி பெற்ற ஐ.தே.க இத்தேர்தலில் பெற்ற பெரு வெற்றியையும் பற்றி விமர்சனம் செய்த வெளிநாட்டு பத்திரிகைகள், வானொலிகள், திருமதிசிறிமாவோஅரசாங்கத்தில் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு 'வேலையில்லாப்பிரச்னை, பணவீக்கம் ஆகியவற்றுடன் நிர்வாகங்களில் இடம்பெற்ற ஊழல்கள் உறவினர்களுக்கு முக்கியத்துவம், அவசரகாலச்சட்ட அமுல் என்பனவும், திரு. ஜே ஆர். தனது கட்சியை புதிய கொள்கைகளுடன் மெருகுபடுத்தியிருப்பதுமே காரணமென்று குறிப்பிட்டிருந்தன.

### மூன்பு 91; இப்பொழுது 8

1970 ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 91 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதில் ஏறக்குறைய அரை மடங்கு ஸ்தானங்களையாவது கைப்பற்றுமென்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் —

144 தொகுதிகளில் போட்டியிட்ட அக்கட்சி, எட்டுத் தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

மூன்று அங்கத்தவர் தொகுதியான கொழும்பு மத்திய தொகுதியில் 3 வது உறுப்பினராக ஜனுப் ஹலீம் இஸாக், அத்தனகல்லையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கம்பஹாவில் திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, பேருவளை இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இரண்டாவது உறுப்பினராக திரு. ஆர். ஜீ. சமரநாயக்க, நுவரெலியா–மஸ்கெலியா மூன்று அங்கத்தவர் தொகுதியில் 2-வது உறுப்பினராக திரு அநுரா பண்டாரநாயக்கா, கொத்மலையில் திரு. ஆனந்த தசநாயக்க, ஆனமடுவ புதிய தொகுதியில் திரு. சந்தாதிஸ்ஸ வடிகமங்காவ, மதவாச்சியில் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய எண்மருமே வெற்றி பெற்றவர்களாவர்.



இவர்களில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும் தவிர்ந்த ஏனைய அறுவரும் இம்முறைத் தேர்தலில் புதிதாக போட்டியிட்டவர்கள். கம்பளை தொகுதியில் வெற்றிபெற்ற திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா 1970 பொதுத்தேர்தலில் சுயேச்சை உறுப்பினராக இத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்.

ஆக, கடந்த அரசாங்கத்தின் பிரதமர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா, நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய இருவரையும் தவிர ஏனைய அமைச்சர்கள், சபாநாயகர் அனைவருமே இத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்கள். நியமன உறுப்பினர்களாகவிருந்த அஞ்சல்தொலைத்தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், கல்வி அமைச்சர் திரு. அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் ஆகியோரும் இத் தேர்தலில் போட்டியிட்டு தோல்விகண்டனர்.

### சிறிமாவின் வெற்றி

1970 தேர்தலில் 21,723 அதிகப்படி வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற திருமதி சிறிமாவோ இம்முறை 10,663 அதிகப்படி வாக்குகளையும், 9,598 அதிகப்படி வாக்குகளைப் பெற்ற திரு மைத்திரிபால சேனநாயகா இம்முறை 366 அதிகப்படி வாக்குகளையும் மட்டுமே பெற்று வெற்றிபெற்றனர்.

திருமதி சிறிமாவோ, மகாவலி அபிவிருத்தித் திட்டமும், ஆசிரிய நியமனங்களும் தமக்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்த்தார். இந்த அடிப்படையில் மகாவலி நீரைப் பெற்ற கிராமப்புறங்களில் அவரது கட்சி சில தொகுதிகளில் வெற்றிபெறலாமென ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் முடிவு அவ்வாறு இருக்கவில்லை.

கிராமப்புறங்களிலும் தீப்பெட்டி முதலாக துணிவகைகள் வரை சகலவற்றுக்கும் ஏற்பட்ட 'கியூ' மக்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

விளைவு, உலகின் முதலாவது பெண் பிரதமராக 1965-ம் ஆண்டு ஜூலை 21-ம் திகதி பதவியேற்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவருக்குப் பின்னர் பிரதமர்களான திருமதிகள் இந்திரா காந்தி, கோல்டா மேயர் ஆகியோர் தங்கள் பதவிகளை இழந்துவிட்டபின்னரும் உலகின் ஒரேயொரு பெண் பிரதமராகவிருந்தவர், இவ்வாண்டு ஜூலை 21-ந் திகதி தேர்தலில் . தமது பிரதமர் பதவியை இழந்தார்.

1965 பொதுத்தேர்தலில் அவர் பதவியை இழந்த போதும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இம்முறை அவருக்கு அந்த வாய்ப்பும் இருக்கவில்லை.

### ஒரு தோல்வியிலும் ஒரு வெற்றி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின இத் தோல்வியிலும் அக்கட்சித் தலைமைப்பீடத்தின் எதிர்கால வாரிசான திரு. அனுரா பண்டாரநாயக்கா வெற்றிபெற்றிருப்பது அவரைப் பொறுத்தவரையில் 'தோல்வி'யிலும் ஒரு வெற்றி' என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

1970 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டு அரசாங்கத்தை அமைத்த இடதுசாரிகள் பின்னர் அரசிலிருந்து வெளியேறி இம்முறைத் தேர்தலில் ஆட்சிபீடத்துக்காக தனித்துப் போட்டியிட்டனர்.

ல. ச. ச. க, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, திரு. ரி. பி. சுபசிங்காவின் மக்கள் ஜனநாயக முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டு சேர்ந்து இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியை தோற்றுவித்துப் போட்டியிட்டன.

யாருக்கேனும் கணிசமான ஒத்துழைப்பைக் கொடுக்கக் கூடிய வகையிலும் கூட இவர்கள் வெற்றிபெறுவார்களா என்பது சந்தேகமாகவே இருந்தாலும், எதிர்பாராதவிதத்தில், இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரபல்யமும்-அநுபவமும் வாய்ந்த அரசியல்வாதிகளான இம் முன்னணியின் தலைவர்கள் உட்பட சகலருமே தோற்கடிக்கப்பட்டது. இலங்கையில் இடதுசாரி இயக்கத்துக்குப் பலமான அடியாகவேகருதப்படவேண்டியுள்ளது.

1970 தேர்தலில் லங்கா சமசமாஜக்கட்சி 16 ஸ்தானங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி 9 ஸ்தானங்களிலும்



வெற்றிபெற்றிருந்தும் இம் இத் தொகுதிகளில் இவர்கள் மிகக்குறைந்த அளவு வாக்கு எண்ணிக்கைகளையே பெற்றிருந்தார்கள்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆரம்பகாலந்தொட்டே பிரதிநிதித்துவம் வகித்த பெருமையைப் பெற்றவர்களான டாக்டர் என். எம். பெரேராவும், திரு. பீட்டர் கெனமனும் இத் தோல்வியின் மூலம் அப் பெருமையையும் இழந்தார்கள். இப் பெருமைக்குரிய மூன்றுமவரான திரு. மைத்திரிபாலா சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அப் பெருமையைத் தப்பவைத்துக்கொண்டார்.

கரிஸ்பற்றுவ இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இரண்டாவது உறுப்பினராக திரு. விஜயசிறி, ஆர். பிரேமச்சந்திர சுயேச்சை உறுப்பினராக வெற்றிபெற்றதைத் தவிர இம்முறைத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்கள் வேறு எவருமே வெற்றிபெறவில்லை.

வெற்றிபெறலாம் என எதிர்பார்க்கப்பட்ட சுயேச்சையாளர்களான டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா, திரு. முதியான்சே தென்னக்கோன், திரு. வாசுதேவநாணயக்கார ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர்.

திரு. முதியான்சே தென்னக்கோன் 1970 பொதுத் தேர்தலில் நிக்கரவெட்டியா தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகவே வெற்றிபெற்றார்.

இம்முறைத் தேர்தலில் பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதி தவிர்ந்த 159 தொகுதிகளில் 166 ஸ்தானங்களுக்காகப் போட்டியிட்ட மொத்தம் 749 பேரில் 289 பேர் சுயேச்சைகளாவர்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தமது பிரச்சாரக் கூட்டங்களின் ஆரம்பகாலங்களில் நூறு ஸ்தானங்களுக்கு மேல் தமக்கு தேவை எனக் கேட்டவர், பின்னர் தொண்ணூறு ஸ்தானங்களை கேட்டார்.

நாடு அடங்கிலும் 152 தொகுதிகளில் போட்டியிட்ட ஐ. தே. க. 139 ஸ்தானங்களைக்கைப்பற்றியிருக்கிறது. 1970 தேர்தலில் தோல்வியடைந்த பலர் இத்தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் 11 தொகுதிகளில் தமிழர்கள் போட்டியில் நின்றபோதும் கிழக்குமாகாணத்தில் கல்குடா தொகுதியில்மாத்திரம் ஐ தே. கட்சி சார்பில் ஒரு தமிழர் வெற்றிபெற்றார். மந்திரிசபையிலும் அவருக்கு இடமளித்து நீதி அமைச்சராக அவர் நியமனம்பெற்றிருக்கிறார். இவர் வெற்றிபெற்றிருக்காவிடின் நியமன உறுப்பினர் ரத்துச் செய்யப்பட்ட புதிய அரசியலமைப்பில் தமிழர் ஒருவருக்கு மந்திரிசபையில் இடமளிக்கும் வாய்ப்பு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இல்லாதுபோயிருக்கும்.

ஐ. தே. க. பெற்ற பிரமாண்டமான வெற்றியில் புதிய ஒரு குடும்பத்தவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முதன்முதலாக பிரதமராகியிருக்கிறார்.

சிறந்த ராஜதந்திரியும், ஜனநாயககோட்பாட்டில் நிறைந்த நம்பிக்கையும் உறுதியான செயற்திறனும்கொண்ட திரு. ஜே. ஆர்.மிகப்பெரும் வெற்றியைப்பெற்றிருப்பதால் அவருக்குப் பொறுப்புக்களும் அதிகரித்தேயிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி எதிர்பாக்கப்பட்டதேயென்றாலும் சில எதிர்பாராத சம்பவங்கள் கூட்டணியைப் பொறுத்தவரையிலும் நிகழ்ந்தேயிருக்கின்றன.

வடக்கில் நெருக்கடியான தொகுதிகளாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, பருத்தித்துறை உட்பட சகல தொகுதிகளிலும் மிகப்பெரும்பான்மை அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்ற கூட்டணி கிழக்கில் இரு தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றது. அதாவது கூட்டணி சார்பில் போட்டியிட்ட முஸ்லிம்கள் அனைவரும் தோல்வியே கண்டனர். பொதுவாக எதிர்பார்த்த அளவுக்கு முஸ்லிம் மக்களின் ஆதரவு தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு கிடைக்கவில்லை என்றே தெரிகிறது. இது துரதிஷ்டமான ஒரு சம்பவமாகும்,

ஆனாலும், தனிநாடு கோரிக்கைக்கான சர்வசனவாக்கெடுப்பாக இத்தேர்தலைப் பிரசாரம் செய்திருந்த கூட்டணி வடக்கில் அமோகவெற்றியைப்பெற்றிருக்கிறது. தனி அங்கத்தவர் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே நாடு முழுவதிலும் மிகப்பெரும் அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

1974-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் 75 வாக்குகளால் ஐ. தே. க. விடம் இழந்த மன்னார்த் தொகுதியை இம்முறை 2,212 அதிகப்படி வாக்குகளால் கூட்டணி மீண்டும் கைப்பற்றியிருக்கிறது.

1970-ம் தேர்தலில் 648 வாக்குகளால் இழந்த பட்டிருப்புத் தொகுதியையும் ஐ. தே. க. விடமிருந்து தமிழர் விடுதலைக்கூட்டணி 10;244 அதிகப்படி வாக்குகளால் கைப்பற்றியது.

கல்குடாவில் ஐ. தே. கட்சியிடம் 545 அதிகப்படி வாக்குகளால் கூட்டணி தோல்வி கண்டது. 1910 பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சியிடமிருந்து 2,785 அதிகப்படி வாக்குகளால் ஐ. தே. க. இத் தொகுதியை கைப்பற்றியிருந்தது.


> "கிராமப்புறங்களிலும், தீப்பெட்டி முதலாக துணிவகைகள் வரை சகலவற்றுக்கும் ஏற்பட்ட 'கியூ' மக்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது."

மாலி

(9-ம் பக்கம் பார்க்க)

## விவசாயப் பெருமக்களே!

# வெங்காயப் பயிர்களை காப்பாற்றுங்கள்!



யாழ்ப்பாணம், வவனியா மாவட்டங்களில் வெங்காயப் பயிருக்கு தண்டுகோதிப் புழுவினால் ஏற்பட்ட பெருஞ்சேதமே தற்போது வெங்காயத்தற்கு ஏற்பட்ட உயர் விலைக்குக் காரணமாகும். இத் தண்டுகோதிகளை தற்போது நாம் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. இவ்வருட ஆரம்ப முதல் இப்பிரச்னையை ஆராய்ந்து வந்த மகாஇலுப்பள்ளம ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பூச்சியியலாளர் இவ்வபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர்.

முதன் முதலாக இப்புழு 1976ஆம் ஆண்டு ஆனி மாதம் பருத்தித்துறையில் அவதானிக்கப்பட்டது. அந்நேரத்தில் இது வெங்காயப் பயிரை மட்டும் தாக்கிவந்தது ஆனல் 1977 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடர்ந்து இதன் பெருக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு, வவனியா மாவட்டம் ஆகிய இடங்களுக்குப் பரவியதோடு மற்றைய பயிர்களையும் தாக்க ஆரம்பித்தது. விசேடமாக மிளகாய்ப் பயிரையும், கத்தரி, பீற்றூட், அவரையினங்கள், புகையிலை போன்ற மற்றைய பயிர்களையும் இப்புழு தாக்கியதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்புழுக்கள் மற்றைய பயிர்களைத் தாக்கியபோது சாதாரணமாகப் பயன்படுத்தும் பூச்சிநாசினிகளை விசிறிக்கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்த பொழுதிலும், வெங்காயப் பயிரில் ஏற்படுத்திய பெருஞ் சேதத்தினை இப்பூச்சிநாசினிகளைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதற்கு முக்கிய காரணம் மற்றைய பயிர்களில் இப்புழுக்கள் சேதத்தை ஏற்படுத்தும் இலைகளின் மேற்புறத்தில் இருந்துகொண்டே சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதே நேரத்தில் இப்புழுக்கள் வெங்காயத்தாள்களைத் துளைத்து உட்பாகத்தில் இருந்துகொண்டு சேதத்தை உண்டு பண்ணுவதனால் விசிறப்படும் மருந்துகளும், தூள்களும் அவற்றைக்கொல்வதில்லை.

இப்புழுவின் அந்துப்பூச்சி (இஸ்பொடொப்ரெரு எக்ஸிகியூ) வெங்காயத்தாள்களின் நுனியில் முட்டைகளை இடுகின்றன. 4—7 நாட்களின் பின் இம்முட்டைகளிலிருந்து பொரித்து வெளிவரும் சிறிய பச்சை நிறப் புழுக்கள், வெங்காயத்தாள்களைத் துளைத்துக்கொண்டு உட்செல்கின்றன. இப்புழுக்கள் முதிர்ந்துவரும்போது கடுங்கபில நிறமாக மாறுகின்றன. இப்பருவத்தில் புழுக்கள் ஒரு பயிரை முற்றாக உண்டு முடித்து தோட்டத்திலுள்ள மற்றைய பயிர்களைச் சேதப்படுத்த ஆரம்பிக்கின்றன.

இதன் புழுப்பருவம் 10 14 நாட்களாகும். அதன்பின் புழுக்கள் மண்ணில் கூட்டுப்புழுவாக மாறுகின்றன. இவ்வாறு கணக்கிடும்போது இப்பூச்சியின் வாழ்க்கைக்காலம் ஆகக் கூடியது மூன்று கிழமைகளாக இருக்கும்.

அதனால் 60-90 நாட்கள் வயதுடைய வெங்காயப் பயிரில், இப்பூச்சியின் 3-4 சந்ததிகள் சேதத்தை ஏற்படுத்தக் கூடும். அதிர்ஷ்டவசமாக வெங்காயப் பயிரின் முதல் 45 நாள் பருவத்திலேயே இப்புழுக்கள் பெருஞ்சேதத்தை உண்டுபண்ணுகின்றன. எனினும் இக் குறுகிய காலத்தில் குறைந்தது இரு சந்ததிகளாவது உற்பத்தியாகக்கூடும்.

ஒரு தனி அந்துப்பூச்சி 1000 முட்டைகளை இடக்கூடிய சக்தியைக் கொண்டிருப்பதனால் அங்கு ஒரு சந்ததியில் ஆயிரக்கணக்கில் அந்தப்பூச்சிகள் உண்டாவதோடு அவை கட்டுப்படுத்தப்படாது விடப்படுமேயானால் அவை பெருகி எவ்வளவுசேதத்தைஉண்டுபண்ணுமென்பதை நீங்களே கற்பனை செய்துகொள்ளமுடியும்.

### நாசினிகள்

அண்மைக்காலம்வரை இப் புழுக்களை கட்டுப்படுத்துவது பெரும் பிரச்னையாகவே இருந்து வந்தது. எனினும் தற்போது ஆராய்ச்சியாளர்கள் விசிறி 24 மணித்தியாலங்களுக்குள் 70-80% புழுக்களைக் கொல்லக்கூடிய மூன்று பூச்சி நாசினிகளைச்சிபாரிசு செய்துள்ளார்கள். அவையாவது (1) பேமதிறன் 25% செ. கு, (அம்புஸ்). (2) குயினல்பொஸ் 25% செ.கு. (பேறூசில்). (3)பீனேவலசேற் 25% செ.கு. (கமிசிடின்). இவை தொடுகைப் பூச்சிநாசினிகளாகும். அதாவது இப்பூச்சிநாசினிகள் புழுக்களின் மேல்பட்டால் மட்டுமே அவற்றைக் கட்டுப்படுத்தும். அதனால் முட்டைகள் பொரித்து வெளிவரும் புழுக்கள் வெங்காயத்தாள்களைத் துளைத்து உட்புகுவதற்கு முன் உள்ள குறுகிய நேரத்தில் பூச்சிநாசினிகள் விசிறப்படவேண்டும்.

வெங்காயக் குமிழ்களை நட்டு ஐந்தாம்நாள்முதல் ஒவ்வொரு 5 நாட்களுக்கு ஒருமுறையும் பயிர் 45-வது நாட்பருவத்தை அடையும்வரை பூச்சிநாசினிகள் விசிறல் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதன் பின் புழுக்கள் சேதப்படுத்த முடியாதவாறு இலைகள் முதிர்ந்துவிடும்.

பேறூசில் பூச்சி நாசினியாயின் 1 திரவ அவுன்ஸ் மருந்தை 1 1/2 கலன் நீரில் கலந்து விசிறவேண்டும். அம்புஸ், கமிசிடின் பூச்சிநாசினிகள் மிகவும் அடர்வுகூடியவையாகக் காணப்படுவதினால் 1 திரவ அவுன்சை 50–70 கலன் வீதம் நீரில் கலந்து விசிறவேண்டும்.

பூச்சிநாசினிகளைத் தொடர்ந்து விசிறும்பொழுது பூச்சிகள் அவற்றை எதிர்க்கக்கூடியசக்தியைத் தங்களில் ஏற்படுத்தக் கூடுமென பூச்சியியலாளர் பயப்படுகின்றார்கள். அதனால் இவர்கள் மற்றுமொரு முறையையும் சிபாரிசு செய்கின்றார்கள். இம்முறையில் காபோபியூறன் 3% குறுணலை (பியூறடான் 3% அல்லது குறேட்டர் 3%) ஆரம்பத்தில்பிரயோகித்து தொடர்ந்து மேற்குறிப்பிட்ட பூச்சிநாசினிகளைப்பயன்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம், வவனியா மாவட்டங்களில் விவசாயிகள் பாத்திகளில் வெங்காயத்தைப் பயிரிடுகின்றார்கள். தயாரிக்கப்பட்ட பாத்திகளில் நீர் நன்குவிட்டு, சேருக்கி, குமிழிகள் நடப்படுகின்றது, இவ்வாறு பாத்திகள் சிறிது ஈரமாக இருக்கும்போதே காபோபியூறன் 3% குறுணலைப் (20 இறுத்தல் / ஏக்கர்) பிரயோகிக்கவேண்டும். வேரினால் உறிஞ்சப்படும் நஞ்சு பயிரில் காணப்படுவதினால் குமிழ்களை நட்டு 30 நாட்கள்வரை புழுக்கள் சேதம் விளைவிக்காமல் காப்பாற்றப்படுகின்றது.

இப்பருவத்தில் அதாவது பயிரின் 30-வது நாட்பருவத்தில் பிரயோகிக்கப்பட்ட காபோபியூறனின் நச்சுத் தன்மை குறைவடைவதால் தொடர்ந்து முதலில் குறிப்பிட்ட அளவுகளில் அம்புஸ், கமிசிடின், பேறூசில் மருந்துகளில் ஒன்றைப் பிரயோகிக்கவும். வெங்காயத் தாள்கள் நன்கு நனையும்வண்ணம் விசிறுவது அவசியமானதையால் தெளிகருவியின் பீச்சுமுனையில் சிவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளவும்.

தற்போது இப்பூச்சியினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வழிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் பெருமளவு சேதம் ஏற்பட்ட இடங்களில் இப்பூச்சியின் பெருக்கத்தை அறிவிப்பதற்காக கமத்தொழில் திணைக்களப் பயிர்ப் பாதுகாப்புப் பகுதியினர் விவசாயிகளது தோட்டங்களில் ஒளிப்பொறிகளை அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதன் அந்துப் பூச்சிகள் இரவில் நடமாடுபவையாக இருப்பதனால், இவை இலகுவில் ஒளிப்பொறிகளினால் கவரப்படுகின்றன இவ்வாறு ஒளிப் பொறிகளில் அகப்படும் பூச்சிகளின் எண்ணிக்கையில் இருந்து பயிருக்குச் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்குப் பெருகியுள்ளனவா என்பதனை அறிந்து கொள்ளலாம். அந்துப் பூச்சியின் சிறிய, சாம்பல் கலந்த கபிலநிறமாகக் காணப்படுவதோடு, முன் இறகுகளில் அலை போன்ற அடையாளங்களும், பின் இறகுகளில் துலக்கமான நரம்புகளும் காணப்படுகின்றன.

குறிப்பு;-

கமிசிடின், அம்புஸ் மருந்துகள் 1 அவுன்சை 15-20 கலன் நீரில் கரைத்து 15 நாட்களுக்கு ஒருமுறை விசிறும்படி மருந்துப் போத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனல் அண்மைக்கால கமத்தொழில் திணைக்கள ஆராய்ச்சிகளின்படி இம்மருந்துகளில் ஒரு அவுன்சை 50–70 கலன் நீரில் கலந்து 5 நாட்களில் ஒரு முறை விசிறும்வண்ணம் விவசாயிகள் ஆலோசனை கூறப்படுகின்றார்கள்.

(கமத்தொழில் செய்திக் கடிதம் – கமத்தொழில் செய்திப் பிரிவு)

## வழிகாட்டும் ஆவி —

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

தான் விழுந்திருக்கும். பிறகு ஆவிகளிடம் கேட்ட போது குழந்தையின் மூலமாகத் தாங்கள்தான் அவனைத் தேள் கடியிலிருந்து தப்புவித்ததாகக் கூறினர்.

ஒரு சமயம் எங்கள் வழிகாட்டும் ஆவியிடம் நானும் எனது நண்பர் ஜெயசீத்தாராமும் பேசிக்கொண்டிருந்தோம். (ஆவியுலக ஆய்வில் எனக்குப் பக்கபலமாக இருந்து பல புதிய சோதனைகளுக்கு தன்னை தைரியமாக உட்படுத்திக்கொள்ளுபவர் இந்த நண்பர். சிறந்த மீடியம்கூட) அப்போது அவர் ஒரு தட்டில் சிறிது விபூதியும் கொஞ்சம் தண்ணீரும் கொண்டு வர சொன்னர். விபூதியில் பேறு பிடிக்கச்சொல்லி அதில் ஏதோ சக்கரங்களை (யந்திரங்களை) எழுதினர் பிறகு தண்ணீரிலும் இதேபோல் போடச்சொல்லி தண்ணீரில் மீண்டும் எதோ எழுதினர் எங்கள் வழிகாட்டும் ஆவி. (இவர் பெயர் தாமோதரன்) பிறகு நண்பரை வடக்குநோக்கி அமரச்செய்து அவர் நெற்றியில் ஓம் நமசிவாய நம என்று சொல்லிக்கொண்டே இந்த விபூதியைப் பூசி, அந்தத் தண்ணீரில் பாதியை ஓம் நமசிவாய நம என்று சொல்லி அவர் வாயில் ஊற்றச் சொன்னர். அப்படியே செய்தேன். பிறகு நான் வடக்குநோக்கி அமர நண்பர் எனக்கு அவ்விதம் செய்தார் மீதி இருந்த விபூதியை இருவரும் உடல் முழுவதும் பூசிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ள பட்டோம். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எங்கள் குணமே மாறிவிட்டது. நாங்கள் ஏதேனும் தவறு செய்ய நினைத்தாலும் உள் மனது பலமாக கண்டிக்கிறது. (குறிப்பு: நண்பர் சிகரட் புகைப்பதை திடீரென்று நிறுத்திவிட்டார். இது அவருக்கே ஆச்சரியத்தை அளித்த விஷயம்)

### ஆள்மாருட்டம் செய்யும் ஆவி

நாம் ஒருவரை அழைக்கப் போய் அவரது பெயரைச் சொல்லிக்கொண்டு மற்றொரு ஆவி வந்து பேசி ஆள்மாருட்டம் செய்வது, ஆவி உலகத் தொடர்பில் ஒரு ரசமான விஷயம். ஆனல் இதனல் நாம் வீண் குழப்பம் அடைய நேரிடும். இப்படிப்பட்ட ஆள் மாருட்டங்களையும் நம் வழிகாட்டும் ஆவி. உடனுக்குடன் நமக்கு அறிவிக்கிறது. ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் நல்ல மனைவியோ அல்லது ஒரு பெண்ணுக்கு நல்ல கணவனே அமைவதைப்போன்றதே. ஆவி உலக மீடியம் ஒருவருக்கு நல்ல சக்திவாய்ந்த வழிகாட்டும் ஆவி அமைவதாகும். இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

இப்படி பல வகையிலும் உதவிபுரியும் – வழிகாட்டும் ஆவியின் சொற்படி நம் ஆவியுலகத் தொடர்பை மாற்றிக் கொண்டால் அது மேன் மேலும் புதியபுதிய அனுபவங்களை நமக்குத் தரும் என்பதில் ஐயமில்லை. இதை நாங்கள் அனுபவபூர்வமாக பல மீடியங்களிடம் பார்த்துள்ளோம். இந்த வழிகாட்டும் ஆவிகள் மீடியங்களுக்கு வரப்போகும் இன்பதுன்பங்களை தீர்க்கதரிசிகள்போல அறிவித்து அதற்கேற்றவாறு அவர்களை நடத்தத் துண்டியிருக்கிறார்கள். இந்த வகையில் இவர்களை வழிகாட்டும் ஆவி என்று அழைப்பதைவிட ஆவியுலக ஆசான் என்று அழைப்பதுகூட ஒரு விதத்தில் பொருந்தும்.



யாழ். ரோட்டறிக் காணிவலில் ''நல்லெண்ணெ ராஜா'' நிகழ்ச்சியில் ஆனைக்கோட்டை மகாஜனு கிளப்பைச் சேர்ந்த இளம் சாண்டோ கனகரத்தினம் 200 ருத்தல் எடையுள்ள இரும்புக் குண்டைப் பல்லினுல் தூக்கி வைத்திருக்க, குண்டு நெஞ்சிலே மோதும் வண்ணம் ஒருவர் சுத்தியலால் அடிப்பதையும், கனகரத்தினத்தின் வயிற்றிலே பாரக் குண்டை வைத்துச் சுத்தியலால் மோதுவதையும் படத்தில் காணலாம். இந்நிகழ்ச்சி யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள நல்லெண்ணெ வர்த்தக நிலையமாவ பரிமளா ஸ்டோர்ஸ் ஆதரவில் இடம் பெற்றது

**RIO** (யாழ்ப்பாணம்)

புதிய இயந்திரம் பொருத்தப்பட விருப்பதால் மறு அறிவித்தல் வரை காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டா.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த

**பட்டணத்தில் பூதம்**

(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)

19-ந் திகதி முதல்

சிவகுமார் சுஜாதா **அன்னக்கிளி**

**REGAL** Daily: at 10-30-2-45, 7-00 & 9-30 p.m.

(JAFFNA)

Adventure & Excitement for the Whole Family!

CHARLTON HESTON in

**CALL OF THE WILD**

(Color)

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642

* சிவாஜி * பத்மினி * நாகையா * தங்கவேலு

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

**நான் வணங்கும் தெய்வம்**

(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்

விஜயகுமார் — ஜெய்சித்ரா

**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெய்சங்கர் — சுஜாதா

**நீ ஒரு மகாராணி**

**ராஜா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 7180

முத்துராமன் - சுஜாதா விஜயகுமார் - படாபட் ஜெயலக்ஷ்மி நடித்த

**மயங்குகிறாள் ஒரு மாது**

இன்றுமட்டும் தினசரி 4 காட்சிகள்

**ராணி** (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

**நாளை நமதே**

நாளை முதல் சிவாஜி-கே. ஆர். விஜயா

**ராமன் எத்தனை ராமனடி**

(புதிய பிரதி)

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த

**உழைக்கும் கரங்கள்**

(ஈஸ்ட்மன் கலர்)


## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துடித்துப்போகும் யோகா, நான் வெளிநாட்டில் கழிக்கப் போகும் மூன்று ஆண்டுகளை எப்படித்தான் ஓட்டப்போகிறாளோ'' என்று துன்பம் அடைந்த என்னை அப்பா சொன்ன கசப்பான உண்மை கழுத்தைப்பிடித்துநெருடியது. இதை எப்படி யோகாவுக்குச் சொல்லுவது கலகலப்பாகப் பேசிச், சிரித்துத் துள்ளித் திரியும் அவளின் இருதயத்தை சுக்குநூறாக்கிச் சுட்டெரிக்கும் இதைச் சொல்லாமல் கனடா சென்றுவிட்டால் என்ன...? அப்படிச் செய்யக்கூடாது. எப்படியும், இந்த உண்மையை அவரிடம் சொல்லி, மன நிறைவுடன் விடைபெற்றுச் செல்வதுதான் முறை'' என்று தீர்மானித்துக்கொண்டேன். சொல்லிப் புரியவைக்கமுடியாததைக் கடிதத்தின் மூலம் விளங்கப்படுத்துதல் சுலபமல்லவா...?

யோகா;

இக்கடிதத்தை உனக்கு எழுதவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது நம் ஊழ்வினை என்றே நம்புகிறேன். நாங்கள் இருவரும் நெருங்கிப் பழகினோம். ஒருவரை ஒருவர் நேசித்தோம்.

எங்கள் உள்ளங்களில் கீழ்த்தரமான எண்ணங்களோ, ஆபாச உணர்ச்சிகளோ என்றும் தோன்றியது இல்லை எங்கள் இருதயங்கள் மட்டும் ஒன்றை ஒன்று நன்கு அறிந்து பேசின.

இன்று ''பஸ்''சிலும் ஆபீசுகளிலும், பொது இடங்களிலும் நடமாடுபவர்களின் நடையுடையும், அழகும், பேசும் விதமும், கவர்ச்சியை உண்டாக்க, அந்தக் கவர்ச்சி, அவர்களின் மனதில் விபரீத எண்ணங்களைக் கிளறிவிடவில்லை என்று மனம்திறந்து யாராவது சொல்லமுடியுமா? கண்களின் பார்வையில் உடல் ஸ்பரிச உராய்வில், கவர்ச்சியில், மனதைப் பறிகொடாத ஆணோ, பெண்ணோ இருக்கிறார்களா இல்லையா என்பது அவரவர் உள்ளங்களுக்குத்தான் தெரியும். கற்புக்கு இலக்கணம் கூறும் பழந்தமிழ் இலக்கியங்கள், 'ஆணுக்கும் கற்பு உண்டு, பெண்ணுக்கும் கற்பு உண்டு என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்லுவதுடன் நின்றுவிடவில்லை. கண்ணும் கண்ணும் பின்னும் புறச்சேர்க்கையால் கூட ஒரு ஆணோ பெண்ணோ கற்பை இழக்கிறார்கள்' என்று கூறுகின்றன. அந்தக் கண்ணோட்டத்தில் ஆராயும் பொழுது இன்றைய சமுதாயத்தில் வாழும் நம்மில் அதிகமானோரைக் கற்புடையவர்களாக கொள்ளஇயலாது.

மேல்நாட்டு நாகரிகத்தின் அடிச்சுவட்டில் சென்றுகொண்டிருக்கும் நாம், பழந்தமிழ் நூல்கள் கூறும் கற்புநெறியில் வாழமுடியாது என்பது எவ்வளவு இரகசியமான உண்மை. இந்தக் கண்கொண்டு பார்த்தால் நாம் இருவரும் கற்பு இழக்காதவர்களே! கற்பை இழக்காத நான் வேறு ஒரு பெண்ணையும், கற்பை இழக்காத நீ வேறு ஒரு ஆணையும் மணம்செய்து கொள்ள முடியாத ஊழ்வினை என்னும் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். ஆம்... நீ என் தங்கை... நான் உன் அண்ணன். எனது தகப்பனார்தான் உனது தகப்பனார். புரிகிறதா? நான் நாளைமறுதினம் கனடாவுக்குப் புறப்படுகிறேன்.

உனது அண்ணன்

ராஜா.

[யாவும் கற்பனை]


**நாகம்மாள்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30 சனி ஞாயிறு 2-30

சிவராம் - கீதாஞ்சலி

**காத்திருப்பேன் உனக்காக**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)

தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

**கன்னித்தாய்**

**வெஸ்லி** [மானிப்பாய்]

தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30

எம். ஜி. ஆர் - சரோஜாதேவி

**பணத்தோட்டம்**


## பொதுத் தேர்தல் . . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர், சம்மாந்துறை, கல்முனை, புத்தளம் ஆகியதொகுதிகளிலும் ஐக்கிய தேசியக்கட்சி, கூட்டணியை வென்றிருக்கிறது

தன்னுடன் போட்டியிட்ட ஐ. தே. கவை ஒன்பது தொகுதிகளில் தோற்கடித்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐந்து தொகுதிகளில் அதனிடம் தோல்வி கண்டது.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் முதலாமிடத்தைக் கூட்டணியும், இரண்டாம் இடத்தை ஐ.தே.க.வும் பெற்றுள்ளன.

மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரையும், திரு. காசி ஆனந்தனும் இத்தொகுதியில் கூட்டணி வேட்பாளர் நியமனத்துக்காக போட்டியிட்டனர். இருவரில் எவருமே விட்டுக்கொடுக்காத நிலையில் நியமனக்குழு இருவரையுமே மக்கள் தீர்ப்புக்காக அனுப்பியது. அதேசமயம் இருவரில் ஒருவருக்கே வெற்றிவாய்ப்பு உண்டு என்பதையும் நியமனக்குழு இவர்களுக்கு அப்போதே தெரிவித்திருந்தது.

இருவரும் சுமுகமாக ஒரு முடிவுக்கு வராததும் நியமனக் குழுவோ, தலைமைப்பீடமோ தீர்க்கமான ஒரே முடிவை அப்போதேயே எடுக்காததும் மட்டக்களப்பில் கூட்டணி இரண்டுபட்டது. பலதுன்பியல் சம்பவங்கள் அங்கு நடைபெற்றன. மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு 'அவல்' கிடைத்தது. தலைவர்கள் பிரசாரத்துக்காக அங்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

இவர்கள் சுமுகமான ஒரு முடிவுக்கு வந்து இருவரில் ஒருவர் இன்னொரு தொகுதியில் போட்டியிட்டு கீழ் மாகாணத்தில் பிரசாரங்களிலும் ஈடுபட்டிருந்தால் கீழ் மாகாணத்தில் இன்னும் சில தொகுதிகளில் கூட்டணி வெற்றிபெற்றிருக்கலாம்.

### பேரவையில்...

தேசிய அரசுப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாகும் நிலை கூட்டணிக்குக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

பேரவையில் இரண்டாவது பலம் வாய்ந்த கட்சியாக-பிரதான எதிர்க்கட்சியாகும் நல்லதொரு வாய்ப்பு - நல்லதொரு சந்தர்ப்பத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கிடைத்திருக்கிறது.

தமிழர் பிரச்னைகளை வெளிநாடுகளும் உணர்ந்துகொள்ள ஆரம்பித்திருக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்துவார் திரு. அமிர் என்றே எதிர்பார்க்கலாம்.

தமிழினத்தின் பிரச்னைகளையும் கடந்த கால சரித்திர-அரசியல் நிலைமைகளையும் நன்

(10 ம் பக்கம் பார்க்க

## கண்ணால் .....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டால் சில நிமிடநேரங்களில் அது எரிந்துவிடும். அதேபோல ஒருவர் தமது மனதை இறைவனிடம் குவியச்செய்து தியானிப்பாரேல் ஒரு குறிக்கப்பட்ட காலத்தில் தேவ அருள் வெளிப்படும்.

புகழ்பெற்ற விஞ்ஞானம் சடசம்பந்தமான பொருட்களின்ஆராய்ச்சி அறிவின் எல்லையை உடையது; அதன் முடிவில் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய ஞான உணர்ச்சி ஆரம்பமாகிறது. இதையே ''அல்வேட் இன்ஸ்ரெயின்'' என்னும் ஒரு பிரபல விஞ்ஞானி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''மதம் கலப்பற்ற விஞ்ஞானம் முடமானது; விஞ்ஞானம் கலப்பற்றமதம் கண்ணற்றது.''


**வின்ஸர்** [யாழ்ப்பாணம்]

இப்பொழுது நடைபெறுகிறது

தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா, கமலஹாசன், தேவிகா, ஜெயசித்ரா, எஸ். வி. சுப்பையா நடித்த

**சத்யம்**

டைரக்ஷன்: S. A. கண்ணன்

[ஈஸ்ட்மன் கலர்]

[திரைக் கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்]

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்
கைதடி

## பதவி வெற்றிடம்

**தட்டெழுத்தாளர்—தரம் II (தமிழ், ஆங்கிலம்)**

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**தகைமைகள்:** தட்டெழுத்தும் ஒரு பாடமாக, ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணம்), சித்தி அல்லது அதற்குச் சம்மான அரசாங்க அங்கீகாரம்பெற்ற நிறுவனத்தின் சான்றிதழ்

**வேகம்:** தமிழ் நிமிடத்திற்கு 20 சொற்கள், ஆங்கிலம் நிமிடத்திற்கு 30 சொற்கள்.

**சம்பளம்:** 175 - 290 / 7-50X10, 10X4

**வயது:** விண்ணப்ப முடிவுத் திகதியன்று (31-8-77 திகதியன்று) 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் 31-8-1977-க்கு முன் 'பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி' என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்துடன், தகைமைகள், பிறப்புச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ் ஆகியவற்றின் உண்மைப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த மூகவரி எழுதிய தபால் உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 11-08-1977. 6847



## யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**வெற்றிடங்கள்-1.** உதவித் தொழிற்சாலை முகாமையாளர் தரம் (4)
2. பொருத்துநர்.

**வசிப்பிடத்தகைமை-** குறைந்தது இரு வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து வசித்தராக இருத்தல்வேண்டும்.

**வயது:** 1. 1-9-77-ல் 20-க்கும் 40-க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**வேதனம்:** 1. (உதவித் தொழிற்சாலை முகாமையாளர்)
250-00—410 / 10X10—12-50X4

2. (பொருத்துநர்) கூலி நிர்ணய சபைக் கூட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவற்றையும் பெறுவதற்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் -/50 சதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம்பெற விரும்புவோர் சொந்த முகவரியிட்ட போதியளவு முத்திரை ஒட்டப்பட்ட 8''X4'' தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி 29-8-77 நண்பகல் 12 மணியாகும்.

தலைவர்

10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 6845


உரவகை விநியோகத்தில்

## தனியார் ஒத்துழைப்பை கூட்டுத்தாபனம்பெறும்

கொழும்பு, சனி

உரவகை விநியோகத்தில் தனியார்துறையினரின் ஒத்துழைப்பையும் உரக்கூட்டுத்தாபனம் பெறவிருக்கிறது.

உரவகைகளை விநியோகிக்கவும், களஞ்சியப்படுத்தவும் 22 மாவட்டங்களிலும் உள்ள பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகளிடம் இருந்து இது தொடர்பாக கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (உ)

## யாழ்ப்பாணத்தில் ஐ. தே. க. காரியாலயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஐக்கிய தேசியக் கட்சியின் வடபிரதேச காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 20ம் தேதி திறந்துவைக்கப்படும்என ஐ.தே.க.வடபிரதேச அமைப்பாளர் திரு. பொ. கனகசபாபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில், இக்காரியாலயம் திறக்கப்படும் என்று அவர் கூறினார். (க)

## பொதுத்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

குணர்ந்துள்ள திரு. அமிர்தலிங்கம் வெளிநாடுகளிலும் இப்போது ஓரளவுக்கு அறிமுகமாகியிருக்கிறார். அண்மையில் கொழும்பு 'தப்பரபேன் ஹோட்டலி'ல் அவர் இலங்கையின் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றிலும் உரையாற்றினார். அங்கு கூடியிருந்த வெளிநாட்டுத் தூதர்கள், தூதரகப் பிரதிநிதிகள், செய்தி ஸ்தாபனப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு தலைவர் திரு. மேவின் டி சில்வா, திரு. அமிர்தலிங்கத்தை அறிமுகம் செய்துவைத்துக் குறிப்பிட்ட இரத்தினச்சுருக்கமான வார்த்தைகள் பிரமாதமானவை.

அந்த அறிமுகம் அங்கு வந்திருந்தவர்கள் மத்தியில் திரு. அமிர்தலிங்கத்தை துல்லியமாகவே அறிமுகமாகியிருக்கும்.

திரு. மேவின் டி சில்வா குறிப்பிட்டது போல், இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களில் மிக இளமையும் துடிப்பும் வாய்ந்தவரான 'அமிர்' இளமையான எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆகியிருக்கிறார்.

கடந்த தேர்தலில் அவர் தோல்விகண்டபோது, 'எதிர்க்கட்சிகளின் தாக்குதலுக்கெல்லாம் பதிலடி கொடுக்கக்கூடிய ஓர் உறுப்பினரை தமிழ் மக்கள் இழந்து போனார்கள்' என்று சென்னை 'தினத்தந்தி' எழுதியது.

இப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆகியிருக்கிறார்.

## தேசிய சுவீப் முடிவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆறுதல் பரிசுகளாக தலா ஆயிரம் ரூபாய் பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0496 | 34 A 0356 |
| 40 A 0646 | 42 A 0417 |
| 01 B 0763 | 09 B 0297 |
| 24 B 0853 | 12 C 0604 |
| 13 C 0412 | 26 C 0245 |
| 43 C 1000 | 48 C 0861 |
| 07 D 0717 | 07 D 0922 |
| 29 D 0663 | 31 D 0168 |
| 31 D 0318 | 03 E 0990 |
| 04 E 0214 | 06 E 0009 |
| 24 E 0152 | 23 F 0834 |
| 36 F 0968 | 37 F 0394 |
| 46 F 0874 | 03 G 0396 |
| 03 G 0599 | 11 G 0229 |
| 08 H 0841 | 11 H 0631 |
| 20 H 0032 | 23 H 0365 |
| 28 H 0326 | 47 H 0562 |
| 48 H 0557 | 48 H 0945 |
| 15 J 0904 | 45 J 0481 |
| 24 K 0147 | 28 K 0467 |
| 29 K 0708 | 40 K 0972 |
| 42 K 0959 | 01 L 0619 |
| 12 L 0929 | 02 M 0621 |
| 31 M 0262 | 37 M 0638 |
| 18 N 0510 | 28 N 0757 |
| 33 N 0254 | |

| | |
|---|---|
| 23 O 0498 | 33 O 0949 |
| 09 P 0756 | 13 P 0170 |
| 18 P 0332 | 21 P 0373 |
| 44 P 0589 | 47 P 0708 |
| 44 Q 0202 | 49 Q 0746 |
| 05 R 0941 | 23 R 0710 |
| 25 R 0019 | 29 R 0113 |
| 35 R 0116 | 35 R 0335 |
| 41 R 0259 | 01 S 0669 |
| 05 S 0843 | 27 S 0848 |
| 38 S 0741 | 44 S 0912 |
| 13 [illegible] 0812 | 19 T 0557 |
| 47 T 0930 | 01 U 0320 |
| 07 U 0815 | 08 U 0628 |
| 26 U 0739 | 50 U 0212 |
| 13 V 0333 | 27 V 0760 |
| 20 W 0149 | 27 W 0113 |
| 35 W 0195 | 47 W 0716 |
| 14 X 0464 | 16 X 0996 |
| 17 X 0348 | 21 X 0389 |
| 27 X 0349 | 32 X 0314 |
| 33 X 0040 | 15 Y 0053 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## தொல்லை

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி பஸ் நிலையத்தில் பிக்பொக்கட்காரர்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் பிரயாணிகள் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். (உ)

## எம். பி.க்கள்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை நேரில் அறியும் பொருட்டு கோப்பாய் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்தார்.

அங்கு அவர் சென்ற சமயம் வாட்டுக்களில் எந்த நோயாளியும் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது.

மருந்துவகை தட்டுப்பாட்டினால் வெளி நோயாளர் வரவுகுறைவையும் நேரில் அவதானித்து உடன்நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (செ)

## வடிகால்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானவீதி மாட்டின் வீதி கோவில் வீதியில் இதுவரை எரியாமலிருந்த மின் விளக்குகள் இன்றுமுதல் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

யாழ் பஸ் நிலைத்யில் சில இடங்களில் எரியமலிருந்த மின் விளக்குகளும் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)


வந்துவிட்டது

**யமஹா**

அவுட்போட் மோட்டர்களுக்கான
உதிரிப்பாகங்கள் மிகக் குறைந்த விலையில்
பெருந்தொகை கையிருப்பில் உண்டு.
என்ஜின் ரசிதுகளுடன் வரவும்.

**கொன்சோலிடேட்டட் என்ஜினியரிங் கம்பனி**

101, கியூ ரோட் — கொழும்பு-2
தொலைபேசி: 35464. (6855)



எமது ஈழத் தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட
சகலவிதமான கைத்தறிப்புடைவைகளும்.
வெள்ளைப் பப்பிளின், நிறப்பப்பிளின்.
அச்சிடப்பட்ட சீத்தை. பொலியஸ்ரர்
சேட்டிங், சூட்டிங் முதலிய
மின்தறிப்புடவைகளையும்

'புதிய கட்டுப்பாட்டு விலையில்'
பெற்றுக்கொள்ள
நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இடம்

**யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

176, பிரதான வீதி — யாழ்ப்பாணம்

கிளைகள்: சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, பளை, சித்தங்கேணி, வேலணை;

மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்பும்
புடவை வியாபாரிகள்

10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில்
உள்ள எமது தலைமைக்காரியாலயத்துடன்
தொடர்புகொள்ளவும்;

தொலைபேசி: 326

6843



சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு






இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in sri Lanka;